தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

T 4741

Acc. no. 24049

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

துணர் . 62 மலர் . 1

உள்ளுறை

பக்கம்

1. பழமொழிகளில் — தத்துவம் ... 1
2. இந்திய விடுதலை இயக்கமும் தமிழகமும் ... 5
3. ஒருபொருட் பலசொல் - அகராதிப் பதிவு 21
4. இராமலிங்க வள்ளலாரும் திரு நாராயணகுருவும் ஆன்மிக வளர்ச்சி ... 25
5. இந்திய வரலாற்றில் வில்லிபாரதம் பெறும் இடம் 35
6. அழுந்தூர் ஆர்ப்பு ... 42
7. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ... 47
8. சிதறிய சிலம்பு ... 48

ஆசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்

பேராசிரியர் க. வெள்ளைவாரணன், சிதம்பரம்

சிலம்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., பி. டி., பி. எல்., பிஎச்.டி.,
இயக்குநர், தமிழ்வளர்ச்சித் துறை சென்னை.

டாக்டர் தமிழண்ணல், எம். ஏ., பிஎச். டி.,
தலைவர், தமிழ்த்துறை, மதுரைக்காமராசர் பல்கலைக்கழகம்.

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி.,
தலைவர், தமிழ் மொழித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

பேராசிரியர் பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக்கல்லூரி

பேராசிரியர் சி. கோவிந்தராசன்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

புலவர் ஆ. பாலன், எம். ஏ., எம். ஃபில்.,
துணை முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக் கல்லூரி,

புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர், உமாமகேசுவரா மேனிலைப்பள்ளி

திரு. பா. மதிவாணன், எம். ஏ., எம். ஃபில்.,
துணைப்பேராசிரியர், தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக் கல்லூரி.

பதிப்பாசிரியர் : பேராசிரியர் ச. பாலசுந்தரம்

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2019

துணர்: 62 விபவ — சித்திரை மலர்:

ஏப்ரல் — மே — 1988

T 4741

பழமொழிகளில் — தத்துவம்

மா. மீனாட்சிசுந்தரம்,
ஆய்வாளர்—தமிழியல் துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை 625 021.

மனிதர்கள் ஒன்றுகூடி ஒரு சமுதாயமாக வாழ்வது என்றநிலை உண்டான உடனேயே, அந்தக் கூட்டு நிலைத்திருப்பதற்கும் வலுவடைவதற்குமான வழிகளையும் மனிதன் ஆராயத் தொடங்கி விட்டான். அந்த ஆராய்ச்சியின் விளைவாக, ஒவ்வொரு தனி மனிதனுக்கும் உண்டாகிற வாழ்ச்சி தாழ்ச்சிகளுக்குக் காரணம்

காணவும் அவைகளைத் தெளிவுடன் ஏற்று மனிதன் வாழ்வைத் தொடரத்தக்க தெம்பை ஊட்டவும் அவன் முனைந்து வந்துள்ளான். இந்த முயற்சிகளின் விளைவுகளாக முகிழ்த்த கோட்பாட்டு முறையைத்தான் தத்துவம் என்று சொல்லுகிறார்கள். பெரும் பெரும் திறவோர்கள் முயன்று துருவிய இந்தச் சுரங்கத்தில் பாமரமக்களும் தங்கள் கவனத்தைச் செலுத்தி உள்ளார்கள். அதன் விளைவாக அவர்கள் கண்டறிந்தும் கொண்டும் இயற்றியும் வந்த தத்துவத்தைப் பழமொழி ஒருவாறு நமக்குச் சொல்லுகிறது.

வாழ்க்கை அனுபவங்களைச் சரியாகக் கோவைப்படுத்தி, அவைகளுக்குக் காரண காரியத் தொடர்பு கண்டறிந்து,'இன்னதன் விளைவு இன்னது' என்று விளக்குவதே தத்துவம் என்றால் — பாமரமக்களின் தத்துவம் திட்பநுட்பமும் ஓர் ஒழுங்குபாடும் உடையதாக இல்லாவிட்டாலும் அவர்களின் அனுபவக் குரல்களின் தொனி, அதுபோன்ற தத்துவ ஓர்மை ஒன்றை வெளியிடவே செய்கிறது.

வாழ்க்கைத் தொடரில் ஒரு நிகழ்ச்சி முடிந்தபின் அடுத்ததைத் தொடங்கலாம் என்று நின்று கொண்டிருக்க முடியாது என்பதை,

'அலை ஓயுறதெப்போ
தலை முழுகுறதெப்போ'

என்னும் பழமொழி விளக்குகிறது. 'அய்யோ நான் இளைத்துப் போனேனே!' என்றோ,'எனக்கு வேண்டியது கிடைக்கவில்லையே' என்றோ யாரும் அலுத்துக் கொள்வதில் பொருளில்லை. இதனை,

'யானைக்கொரு காலம் வந்தால்
பூனைக்கொரு காலம் வரும்'

என்னும் பழமொழி விளக்குகிறது. இலையும் பழுப்பும் எங்கும் உண்டு என்பதைப் பார்த்துத் தெளிவுபெற வேண்டும். காரணம், அவனவன் எடுத்த வாழ்வை அவனவன்தான் வாழ்ந்து முடித்தாக வேண்டும்.

விதிபற்றிய தத்துவம்

எல்லாவற்றுக்கும் ஒரு நியதி அல்லது முறைமை அல்லது ஊழ் இருக்கிறது ; அது நாம் செய்கின்ற வினைகளின் விளைவாக அமைவது. அதைத் அனுபவித்துத் தீரவேண்டுமே தவிர, தாண்டியோ தப்பியோ சென்றுவிட முடியாது. அந்தப் பெரிய நியதிக்குத் தான் விதி என்று பெயர். அது எல்லோரையும் அவரவர் செயலுக்கு

ஏற்றபடிக் கட்டுப்படுத்தி இயக்குகிறது. சிலரெல்லாம் தாங்கள் அறிவின் திறத்தால் விதியை வென்று விடலாம், — அதற்கு எதிரான வெற்றித் திட்டங்களை உருவாக்கிவிடலாம் என்று எண்ணுகிறார்கள்.

'விதியை வெல்லுவார் உண்டோ'

'வரும் விதிவந்தா வழியிலேயும் தங்காது'

என்னும் பழமொழிகள் மூலம் அவர்களை எச்சரிக்கிறது சமுதாயம்.

நமக்கு நல்வினை இல்லையென்றாலும் நாம் சார்ந்திருக்கிற நல்லோரும் பெரியோரும் நம்மைக் காக்க மாட்டார்களா ?

'கற்பகத் தருவைச் சார்ந்த காகமும் அமுதம் உண்ணும் அல்லவா ?' என்று ஒரு நம்பிக்கைத் துரும்பைப் பற்றிப் பிடிக்கிறார்கள். அவர்கள் யாரும் மற்றவர்களைக் காப்பாற்ற முடியாது என்கிறது இந்தப் பழமொழி.

ஒருவர் மற்றவருக்குச் செய்யும் உதவிக்கு எல்லை உண்டு. அத்தகைய எந்த உதவியும் ஒருவன் தன் செயல்களால் தனக்கு நியமித்துக் கொண்ட விதியை மாற்ற முடியாது. ஏனெனில், விதி என்பது தன் விளைவை ஏற்படுத்தி விடுகின்ற வியாதி. இதை,

'வியாதிக்கு மருந்து உண்டு
விதிக்கு மருந்து உண்டா?'

என்று கேட்கிறது பழமொழி.

வேறுசிலருக்கெல்லாம் ஒரு நப்பாசை 'அண்டையாரையும் அயலாரையும் தானே துணைக் கொள்ள முடியாது? விதிக்கே அதிபதியாக ஆண்டவனையே பிடித்துவிட்டால்? அழுது கெஞ்சி அவன் காலில் விழுந்துவிட்டால்? கண்ணீர் மல்கக் கசிந்து உருகி நின்றால்?...இப்படிக் கேள்வித் தொடர் எழுப்புகிறவர்களுக்கும் பழமொழி பதில் வைக்கிறது.

'பிரம்மா நினைத்தால் ஆயுசுக்குக் குறைவா?'

'பெருமாள் நினைத்தால் வாழ்வு குறைவா?'

என்றெல்லாம் தங்கள் சிலர் ஆண்டவனுக்கு ஆற்றல் கற்பிக்கின்றனர். தான் செய்த வினையின் விளைவிலிருந்து ஒருவன் தப்பிவிட முடியாது என்பதை.

'தலை எழுத்துக்குத் தலையைச் சொரச்சா போகுமா?' என்னும் பழமொழி விளக்குகிறது.

செயல் ஒன்று எந்தவிதமாக நடைபெற்றதோ அதற்கேற்ற விதமான பலனை அடைந்து அனுபவித்துத்தான் தீரவேண்டும் என்பதை,

'உழுகின்ற நாளில் ஊருக்குப் போனால்
அறுக்கிற நாளில் ஆள் தேவையில்லை'

என்னும் பழமொழி வலியுறுத்துகிறது. குற்றத்தைச் செய்து அதன் பயனை அனுபவிக்கின்றவன் தான் ஒருவனே குற்றவாளி என்றோ மற்றவர்களெல்லாம் தூயவர்கள் என்றோ எண்ணி அமிழ்ந்து போக வேண்டியதில்லை. ஏனெனில்,

'ஊற்றை போகக் குளித்தவனுமில்லை
பசிபோகத் தின்றவனுமில்லை'

மாசுதீர வாழ்வது என்பது யாராலும் இயலாது. ஆசைகளை அடக்கிக் கொண்டு வற்றிக் கிடப்பதோ அதனை அளவுபடுத்தி ஒரு வறட்டுத் தண்டவாளத்திலேயே நடக்கச் செய்வதோ யாராலும் இயல்வதில்லை.

பழமொழியாளர் அள்ளித்தெளித்துள்ள வாழ்க்கைத் தத்துவச் சிந்தனைகளைக் கோவைப்படுத்திப் பார்க்கையில், பாமரர் என்று சாதாரணமாக ஒதுக்கப்படும் அவர்களின் அறிவு நம்மைத் திகைக்கடிக்கிறது.

இந்திய விடுதலை இயக்கமும் தமிழகமும்

எஸ். செந்தில் குமார், எம்.ஏ., எம்.பில்.
கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

முன்னுரை :

"கி.பி. 1498இல் மே மாதம் 27-ஆம் நாள் போர்த்துக்கல் நாட்டு வாஸ்கோடகாமா மலபாரில்- 'கப்பாடு' என்னும் இடத்தில் காலெடுத்து வைத்தார். கி.பி 1947இல் ஆகஸ்ட் மாதம் 15 ஆம் தேதியன்று ஆங்கிலேயரான மவுண்ட் பேட்டன் புதுதில்லியில் இந்தியாவின் சுதந்திரக் கொடியை ஏற்றி வைத்துக் கைதூக்கி வணங்கினார். இதற்கு இடைப்பட்ட 450 ஆண்டுகளில் ஏற்பட்ட மாறுதல்களும், வளர்ச்சிகளும் தேசிய உணர்வை உருவாக்கி விடுதலையைப் பெற்றுத் தந்துள்ளன"[1] என்பதற்கு இணங்க இந்த நாடு மேற்கண்ட காலகட்டங்களில் எண்ணற்றப் போராட்டங்களையும், ஏராளமான இன்னல்களையும் எதிர்கொள்ள வேண்டி இருந்தது. நாட்டு மக்களின் சக்தி ஒருமுகப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டபோது பல இயக்கங்கள் நாடுமுழுது மாகப் பரவலாகத் தோன்றி நாட்டு விடுதலைக்கும்; ஒருமித்த வளர்ச்சிக்கும் அடிகோலியது.

ஆங்கில ஆதிக்கத்தால் நாட்டில் ஏற்பட்ட சமூக, பொருளாதாரப் பண்பாட்டுச் சிக்கல்களை எதிர் நோக்க வேண்டி நாடுமுழுமையையும் ஆங்காங்கே சீர்திருத்த இயக்கங்களும், மறுமலர்ச்சி இயக்கங்களும் தோன்றின. இதனை ஒட்டி எழுந்த காங்கிரஸ் பேரியக்கமும், மற்ற சில இயக்கங்களும் நாட்டின் மறுமலர்ச்சிக்கு எவ்வகையேனும் தொண்டாற்றின. இயக்கங்களாக மட்டும் இன்றி தனி நபராகச் சிலரும் இப்பணியில் ஈடுபட்டனர்.

தமிழகத்தைப் பொறுத்த அளவில் மூன்று பெரும் இயக்கங்கள் சமூக, அரசியல் துறைகளில் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தின. இயக்கம் என்ற நிலையிலும் சரி, தனிநபர் என்ற முறையிலும் சரி நாட்டின் தேசிய, வளர்ச்சிக்கும், விடுதலைப் போக்கிற்கும் தமிழகத்தின் பங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

காங்கிரஸ் இயக்கத்திற்கு முன்புள்ள இயக்கங்கள் :

அந்நியர் ஆட்சியில் நியாயமாக எழவேண்டிய கலாச்சார மோதல்களும், குழப்பங்களும் பதினெட்டாம் நூற்றாண்டில் நாட்டில்

---

1. பெ. சு. மணி, இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும். பூங்கொடி பதிப்பகம், சென்னை. இரண்டாம் பதிப்பு. ப. 26.

ஏற்பட்டன. ஆங்கிலேயர்களால் பரப்பப்பட்ட கிறிஸ்துவ மதம், "ஐரோப்பாவில் மத்திய கால சமயவெறி, விஞ்ஞான எதிர்ப்புணர்வு, மூடநம்பிக்கைகள், பிற்போக்குநிலை ஆகியவற்றில் இருந்து விடுபட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆர்த்தெழுந்த பகுத்தறிவு வாதத்தின் பாதிப்பில் வலுவேற்றிக்கொண்டு இந்தியாவில் படை எடுத்தது"[2] இதனைக்கண்ட ஆன்மீகத்தலைவர்கள் சிலர் நாட்டில் ஆங்காங்கே சில அமைப்புக்களை நிறுவினார்கள் இவ்வமைப்புகளே பிற்காலத்தில் காங்கிரஸ் இயக்கம் தோன்றி வளம் பெறக் காரண மாயிற்று.

1818இல் ராஜாராம் மோகன்ராய் தொடங்கிய 'பிரம்ம சமாஜமும், 1784இல் மோனியர் வில்லியம் ஜோன்ஸ் ஏற்படுத்திய 'ஏஷியாட்டிக் சொசைடி ஆப் பெங்கால்' என்ற அமைப்பும், 1875இல் சுவாமி தயானந்தரின் ஆரிய சமாஜமும், 1897இல் விவேகானந்தரால் தொடக்கப்பட்ட இராமக்கிருஷ்ணர் இயக்கமும், 1879-ஆம் ஆண்டு பம்பாயில் தோன்றிய தியோசாபிகல் சொசைடியும், 1865இல் இராமலிங்க வள்ளலார் தொடங்கிய சமரச சுத்த சன்மார்க்க சங்கமும் குறிப்பிடத்தக்க நாட்டின் தேசிய, விடுதலைக்கு அடிகோலிய ஆன்மீக இயக்கங்கள் ஆகும்.

தேசியத்தின் வளர்ச்சிக்குத் துணைபுரிந்த கலாச்சார இயக்கங் களில் ஆரிய சமாஜம், மேலை நாட்டு அரசியல் தத்துவங்கள், ஆங்கிலமொழிக் கல்வியால் பிணைந்த சிந்தனை ஓட்டம் இவற்றின் தாக்கத்தால் உருவானதல்ல. ஆயினும் இந்து மதத்தில் பொதுவாக கிறிஸ்துவமும், குறிப்பாக இஸ்லாமும் ஊடுருவுவதை வன்மையாக எதிர்த்து நிற்க வேண்டிய அளவிற்குக் கொள்கைகளையும், வேலைத் திட்டங்களையும் அமைத்துக் கொண்டது.

பிரம்ம சமாஜமும், இராமகிருஷ்ணர் இயக்கமும் பெருமளவு படித்த வர்க்கத்தின் கிறிஸ்துவ மதமோகத்தைத் தீர்த்தது.

தியோசாபிகல் சொசைடி எந்த மதத்திற்கும் எதிராகப் போர்க் கொடி உயர்த்தாமல், புராதன இந்துமதத் தத்துவக் கோட்பாடு களில் தங்கள் கொள்கைகளை இணைத்துக் கொண்டு அந்நிய நாட்டில் இருந்து வந்தாலும் இந்திய மண்ணில் வளர்ச்சி கண்டது.

இவை அனைத்திற்கும் அப்பால் சமயங்கள் அற்ற ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமை என்னும் தத்துவத்தைத் தந்தது சமரச சுத்த சன்மார்க்கச் சங்கம்.

---

2. பெ. சு. மணி. மு. நு பக். 91

தொடக்க கால அரசியல் அமைப்புகள் :

இந்தியாவின் ஆன்மீக எழுச்சி தேசிய எழுச்சிக்கு அடிகோலியது. நாட்டின் முக்கிய நகரங்களான கல்கத்தா, சென்னை, பம்பாய் போன்றவைகளில் மாநில அரசியல் அமைப்புகள் தொடங்கப்பட்டு செயலாற்றி வந்தன. 1885 இல் காங்கிரஸ் தோன்றுவதற்கு முன்பு 1837 இல் தொடங்கி 1884 வரைபரவலாக பல அரசியல் அமைப்புகள் செயலாற்றின.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தன்னுடைய சுய தேவைக்காகக் கொண்டு வந்தத் தகவல் தொடர்பு, செய்தி, சொத்து உரிமை போன்றவைகளாலும் ஆங்கிலக் கல்வியும் மக்களிடையே புதிய விழிப்புணர்வை ஏற்படுத்தியது. இதன் விளைவாக சமூதாய மேல் மட்டத்தில் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. இதனை படித்த நடுத்தர வர்கத்தை முந்திக் கொண்டு,நிலப்பிரபுத்துவ வர்க்கம்[தன்]வர்க்க நலன்களை காத்துக் கொள்ளச் சங்கங்களை அமைத்துக் கொண்டது.''[3] என்பார் பெ. சு. மணி. இவ்வாறு தோன்றிய சங்கங்களில்,

1. கல்கத்தா—பிரிட்டிஷ் இந்தியன் அசோசியேஷன்—1851.
   ஜமீன்தாரி அசோசியேஷன்—1837
   பெங்கால் பிரிட்டிஷ் இந்தியன் அசோசியேஷன்—1843
2. சென்னை—மெட்ராஸ் நேடிவ் அசோசியேஷன்—1852
3. கல்கத்தா—இந்தியன் அசோசியேஷன்—1876
4. பம்பாய் –பம்பாய் அசோசியேஷன்—1876
5. சென்னை — மகாஜன சபை — 1884.
6. பூனா — பூனா சர்வ ஜனிக் சபை- 1872 - போன்றவைகள் குறிப்பிடத்தக்கனவாகும்.

சற்றேறக்குறைய 47 ஆண்டுகள் மேற்கண்ட அமைப்புகள் பல்வேறு நலன் மற்றும் பிரச்சனைகளுக்காகச் செயலாற்றி வந்தன. இதுபற்றி 1876ல் பிரிட்டிஷ் அதிகாரியின் ஆய்வறிக்கை ஒன்றில்'' கல்வியறிவின் காரணமாக நாடெங்கும் சிறியதும் பெரியதுமான சொசைடிகளும், ''அசோசியேசன்களும் அமையப்பெற்றன...அவைகளின் குறிக்கோள்களை வரையறுத்துக் கூறமுடியாது என்றாலும் கல்வி சமூக விவகாரங்களில் ஈடுபாடு கொள்வதே ஆகும். மக்களின் விருப்பங்களையும் நலன்களையும் விண்ணப்பங்கள் மூலம் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்குத் தெரிவிப்பதே அரசியலாகக் கருதப்பட்டது. இந்த

3. பெ. சு. மணி இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பக்-96

நடவடிக்கைகள் தேசிய மனோபாவத்தின் இயக்கத்திலும், சிந்தனைப் போக்கிலும் அசைவுகளை உண்டாக்கின'' என்று குறிப்பிட்டு உள்ளார்.

பிரிட்டிஷ் இந்தியன் அசோசியேஷன் ஆட்சியாளர் கொண்டு வரும் எந்த மசோதாவைப்பற்றியும் தமது கருத்துக்களை இந்தியா, லண்டன் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தது. சுரேந்திரநாத் பானர்ஜியன் இந்தியன் அசோசியேஷன் பிரிட்டிஷ் ஆட்சிக்குத் தலைவணங்கியே தனது செயல்களைச் செய்து வந்தது. 1877-79இல் சிவில் சர்வீஸ் இயக்கக் கிளர்ச்சியை இவ்வமைப்பு நாடு தழுவிய முறையில் நடத்தியது. அத்துடன் 1883-இல் முதல் தேசிய மாநாட்டைக் கூட்டியது. பம்பாய் அசோசியேஷன் தொழில் முதலாளிகளின் நலன்களைக் காப்பதில் குறியாக இருந்தாலும் உரிமைப் பத்திரத் திருத்தம், லைசன்ஸ் மசோதா போன்ற கிளர்ச்சிகளைக் கையாண்டது.

பூனா சர்வ ஜனிக் சபை 1872, 1876, 1878 களில் ஏற்பட்ட பஞ்சத்தில் ஆற்றியபணி அனைவராலும் பாராட்டப்பட்டது. மெட்ராஸ் நேடிவ் அசோசியேஷன் தொடக்கத்தில் கிறிஸ்துவ மதப் பிரச்சாரத்திற்கு எதிராகக் குரல் கொடுத்தது. ஆட்சியாளர்களுக்குத் தரப்பட்ட கோரிக்கை விண்ணப்பங்களில் மற்ற அமைப்புகளைப் போலன்றி புகழுரைகள் இல்லாமல் குறைகளை நேரிடையாகச் சுட்டிக்காட்டியது இச்சங்கம்.

பொதுவாக இவ்வமைப்புகள் இந்து மதப் பழக்க வழக்கங்களில் அரசாங்கம் தலையிடுவதைக் கண்டித்தன. மேலும் சென்னை மகாஜன சபை பொதுமக்கள் தொடர்பில் ஆழ்ந்த கவனம் செலுத்தியது. நாட்டின் முக்கிய மூன்று மாநிலங்களில் தோன்றிய கலாச்சார தேசிய வாதிகள் தேசிய உணர்வை ஊட்ட தங்கள் தங்கள் பாணியிலே வழிமுறைகளைக் கையாண்டனர்.

இவ்வியக்கங்களைப் பற்றி டாக்டர் யோகீசுவரன், ''சில நிர்வாக சீர்திருத்தங்களையும் வட்டார முன்னேற்றங்களையும் குறிக்கோளாகக் கொண்டு இவ்வியக்கங்கள் தோன்றினவாயினும் இந்தியர்களின் உரிமை உணர்வு வளர்வதற்கு இவை அடித்தளமிட்டன எனக் கொள்ள முடிகின்றது.''[4] என்கிறார்.

---

4. தமிழ்க் கவிதைகளில் சமுதாயச் சிக்கல்கள் — பி. யோகீசுவரன் நிலாபதிப்பகம், முதற்பதிப்பு, 1985 பக். 15.

காங்கிரஸ் இயக்கத்தின் தோற்றம்

கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சித்துறை அதிகாரியாகப் பணிபுரிந்தவர் 'ஆலன் ஆக்டோவியன் ஹ்யூம்'. பின்னால் ஆட்சியினருடன் ஏற்பட்ட மனக்கசப்பால் பணியில் இருந்துவிலகிக் கொண்டார் என்றாலும் கூட 1857இல் ஏற்பட்ட சிப்பாய்கள் புரட்சியைப் பற்றி தானே ஆராய்ந்து ஒரு அறிக்கையை வெளியிட்டார். அதில் நாட்டில் மீண்டும் ஒரு பெரும் புரட்சி ஏற்படும் என்று அரசை எச்சரித்தார்.

பதவி நியமனங்களில் தங்களை பாரபட்சத்துடன் நடத்துவதாக இந்திய ஆங்கிலம் பயின்ற பட்டதாரிகள் அதிருப்தியுடன் இருந்ததை ஹ்யூம் கண்டார். இவர்கள் மக்களுக்குத் தலைமை தாங்கும் பொறுப்பை ஏற்றால் அபாயகரமான விளைவுகள் ஏற்படக் கூடும் என்பதை உணர்ந்தார். 1857 இல் ஏற்பட்ட நிலைமை மீண்டும் உருவாகாது இருக்க, இவர்களுடையத் தேவைகளை நிறைவு செய்ய அனைத்திந்திய அளவில் ஒரு அமைப்பு தேவை என்ற முடிவிற்கு வந்தார், மிதவாத இயக்கம் ஒன்றை உருவாக்குவதன் மூலம் இயக்கம் கட்டுக்கடங்காமல் செல்வதை அவர் தடுக்க எண்ணினார் என்ற பிபென் சந்திராவின் கருத்து ஒப்பு நோக்கத் தக்கது ஆகும்.[5]

1857-இன் வன்முறையில் மதத்தலைவர்கள் காரணமாக இருந்தனர் என்று ஹ்யூம் எண்ணியதால் மக்கள் மீது அவர்களுக்கு இருக்கும் பிடிப்பைத் தளர்த்தவும், புரட்சி எண்ணங்களற்ற ஆங்கிலம் கற்ற பட்டதாரிகளின் கீழ், மக்களை கொண்டுவர விரும்பினார். எனவே பட்டம் பெற்ற இந்தியர்களில் சிலராவது தாய்நாடு நலமடைய என்னைப் போன்றவர்களை பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். அதே சமயத்தில் எவ்வகையிலேனும் இந்தியாவை சாம்ராஜ்ய பிடிப்பில் தக்க வைக்க வேண்டும் என்ற எண்ணம் அவர் மனத்தில் உருவாகியது

கல்கத்தாவின் சுரேந்திர நாத் பானர்ஜி 1883 இல் நாடு தழுவிய முறையில் முதல் தேசிய மாநாட்டை கல்கத்தாவில் நடத்தினார். அதில் அவர், ''தேசிய சக்திகளை ஒன்றுதிரட்டி ஒருமுகப்படுத்திப் பொதுவான நோக்கங்களின் முன்னேற்றத்திற்காக, ஊக்கமுடன் தொண்டாற்ற வேண்டும் என்ற காரணத்தால் தான் இந்த மாநாட்டைக் கூட்ட வேண்டும் என்று நான்

5. மேற்கோள், மேற்படி — பக் - 15.

விரும்பினேன்." [6] என்று உரையாற்றினார். 2-ஆவது மாநாட்டை கல்கத்தாவில் நடத்தினார். அதே சமயம் சுரேந்தரைப் புறக்கணித்து விட்டு ஹியூமின் ஆதரவுடன் உமேஷ் சந்திர பானர்ஜியைத் தலைமையாகக் கொண்டு 1885 டிசம்பரில் அகில இந்திய காங்கிரஸ் மகாசபை பம்பாயில் கூடியது.

ஒவ்வொரு மகாசபை கூட்டத்தின் போதும் பிரிட்டிஷ் அரசருக்கு வாழ்த்தும் வழிபாடும் நடத்தப்பட்டன. முதல் மாநாட்டில் முதல் தீர்மானம் G. சுப்ரமணிய ஐய்யரால் முன்மொழியப்பட்டது. அதில் "இன்று முதல் நாம், இந்த சமயத்தில் இருந்து இந்திய தேசியம், தேசியக்கருத்து, தேசிய விருப்பங்கள் என்று பேசுவோம்", [7] என்று குறிப்பிட்டார்.

சென்னையில் நடைபெற்ற 3ஆவது மாநாடு காங்கிரஸ் வரலாற்றின் திருப்பு முனையாகும். மண்டபங்களில், படித்தவர்கள் மத்தியில் ஆங்கிலத்தில் நடந்து வந்த காங்கிரஸ் மாநாடு சென்னையில் பெரும் திடலில் அனைத்து மக்களும் கலந்து கொள்ள தமிழ் மொழியிலேயே மாநாட்டுச் செய்திகள் நடத்தப்பட்டது. அப்போது வெளியிடப்பட்ட காங்கிரஸ் வினா விடை ஆட்சியாளரைத் திகைக்க வைத்தது காரணம்,

"சிறுபான்மையினரான படித்தவர்களின் ஆரவாரங்களை அவர்களால் பொருட்படுத்தாமல் இருக்க முடியும். ஆனால், புறநகர்களில் வாழும் லட்சக்கணக்கான மக்களின் ஆதரவைத் காங்கிரஸ் நாடியபோது அதனை ஒடுக்க முயன்றனர்" [8] என்பது தான்.

ஹியூம் 22 ஆண்டுகள் செயலாளராக பணியாற்றியபோது, ராஜ வாழ்த்தும், பிரிட்டிஷ் ஆட்சிக்கு விசுவாசம் தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சுருக்கமாகக் கூறினால் ஹியூமின் மேற்கண்ட காலங்களில் படித்த இந்தியர்களுக்கு உயர் பணிகளும், சலுகைகளையும் தேடித்தரும் ஸ்தாபனமாக காங்கிரஸ் செயல்பபட்டது எனலாம்.

காங்கிரஸின் முப்பெரும் காலகட்டங்கள் :

காங்கிரஸின் வரலாற்றை மூன்று காலகட்டங்களாகக் கூறுகின்றனர். 1885 முதல் 1906 வரையில் ஹியூமின் கால

6. பெ. சு. மணி, மு. நூ. பக். 323
7. மேற்படி. பக். 369.
8. விடுதலைப் போரில் தமிழகம், முதற்பாகம், மா. பொ. சி. இரண்டாம் பதிப்பு 1983. பூங்கொடி பதிப்பகம், சென்னை 4. பக். 135.

கட்டம். (22 ஆண்டுகள்), 1907இல் இருந்து 1920 வரையிலான 13 ஆண்டுகள் திலகரின் காலகட்டம், அதாவது தீவிரவாதிகள் காங்கிரஸில் செல்வாக்கு பெற்றிருந்த காலங்கள், 1920இல் இருந்து 1947 வரையிலான 28 ஆண்டுகள் காந்தியின் காலகட்டம். அதாவது இது மிதவாதிகள் செல்வாக்கில் காங்கிரஸ் இருந்த காலகட்டம் ஆகும். இந்த மூன்று காலகட்டங்களிலும் தமிழகம் சிறப்பானதொரு பங்கினை மேற்கொண்டிருந்தது.

தொடக்ககாலத்தில் G. சுப்ரமணிய ஐயர், S. சுப்ரமணிய ஐயர், வீரராகவாசாரியார், போன்றவர்களும், வ. உ. சிதம்பரம், சுப்ரமணிய சிவா, சுப்ரமணிய பாரதி, நீலகண்ட பிரம்மச்சாரி, வாஞ்சிநாதன், மாடசாமி போன்றவர்கள் திலகர் அணியிலும் ராஜாஜி, சத்தியமூர்த்தி, திரு.வி.க, காமராஜர், டி.எஸ். ராஜன் போன்றவர்கள் காந்தியின் காலங்களில் சிறப்பிடம் பெற்றனர்.

சமூக ஸ்தாபனமாகத் தோன்றிப் படிபடியாக வளர்ச்சிபெற்று காங்கிரஸ், நாட்டின் ஒற்றுமையையும் ஒருமித்த தேசிய உணர்வினையும் மக்களிடையே ஏற்படப்பாடுபட்டது. தொடக்க காலம் தொட்டே பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருந்து வந்துள்ளதால் பிற்கால வளர்ச்சியில் ஒரு சில இயக்கங்கள் தோன்ற காங்கிரஸ் அடித்தளம் இட்டது என்றால் அது மிகையாகாது.

ஆங்கிலம் பயின்ற பட்டதாரிகளால் தொடங்கப்பட்ட காங்கிரஸ் சபை அவர்களுடைய நலன்களையேபெரிதாக எண்ணிச் செயல்பட்டது. 3 ஆவது காங்கிரஸ் கூட்டம் சென்னையில் நடைபெறும் வரையில் விண்ணப்பித்து, துதிபாடிக் காரியங்களை - மக்களுக்கு அப்பாற்பட்டு செயலாற்றி வந்தது. திலகர் காங்கிரஸில் பொறுப்பேற்று இருந்தபோது வங்கப்பிரிவினையை முன் வைத்து போராடியது 'சுதேசி இயக்கம்' மக்களியக்கமாக அந்நாளில் பரவியது. திலகர், வ. உ. சி. அரவிந்தர் ஆகியோர் அரசியல் துறவை மேற்கொண்டபின் 1919 இல் காந்தியின் தலைமையைக் காங்கிரஸ் நாடியது, காந்தியின் தலைமையில் நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கம், சத்தியாகிரகம், அகிம்சை போன்ற முயற்சிகள் நாடு முழுமையும் பெரும் வரவேற்பைப் பெற்றன.

மதுவிலக்கு, ஆதாரக்கல்வி, கதரியக்கம் போன்றவற்றை சாதி மத, மொழி, மாநிலங்களுக்கு அப்பால் காந்தியால் செயல்படுத்தப்பட்டன, மிதவாதம், தீவிரவாதம் என்று காங்கிரஸில் பிளவு

ஏற்பட்டாலும் ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்தே செயல் ஆற்றினர். மிதவாதம் பேசிய காந்தியே பின்னால் தீவிர வாதி களின் கருத்துக்குச் செவி சாய்க்க வேண்டி இருந்தது.

1947க்கு பிறகு காந்தியடிகள் அரசியல் பணியில் இருந்து விலகி கொண்டார். இப்படி தோன்றி வளர்ந்த காங்கிரஸின் வளர்ச்சிப் பணியில் ஒவ்வொரு முக்கிய நிகழ்ச்சிகளிலும் தமிழகம் தன் பணியை முறையாகச் செய்தது. காங்கிரஸின் வளர்ச்சிக்கு வங்காளம் வித்திட்டது என்றால் தமிழகம் அதனை வளர்த்தது எனலாம்.

பொதுவுடைமை இயக்கத்தின் தோற்றம் :

காங்கிரஸ் இயக்கத்தைப் போலவே பொதுவுடைமை இயக்கமும் திடீர் எனத் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளவில்லை 1925 ஆம் ஆண்டு M. சிங்காரவேலு செட்டியார் போன்றவர்களால் கான்பூரில் இந்தியப் பொதுவுடைமைகட்சி தோற்றுவிக்கப் பட்டது.[9] என்றாலும்கூட காங்கிரஸின் தோற்றத்திற்கு முன்பாக அதாவது 1885க்கு முன் 1871 இல் கார்ல் மார்க்ஸின் அகிலத்தின் கிளை ஒன்று இந்தியாவில் – கல்கத்தாவிலே அமையவேண்டும் என்று விண்ணப்பிக்கப் பட்ட செய்தி வியப்பூட்டுவதாக உள்ளது

1871 இல் இலண்டனில் கார்ல்மார்க்சின் தலைமையில் கூடிய முதல் அகிலத்தின் பேரவைக் கூட்டத்தில் அந்த விண்ணப்பம் விவாதிக்கப்பட்டது. அந்த விண்ணப்பத்தில், ''மக்களிடையே அதிருப்தி பெருமளவில் நிலவுகின்றது. பிரிட்டிஷ் ஆட்சி முற்றிலுமாக விரும்பப்படவில்லை. வரிவிதிப்பு அதிகமாக உள்ளது. நிருவாகத்தின் செலவுகளே அனைத்து வருவாயையும் விழுங்குகின்றன. தொழிலாளர் உழைப்பிலே தோன்றும் செல்வம் ஆளும் வர்க்கத்திற்காகச் சிதறடிக்கப் படுகின்றது. அகிலத்தின் கொள்கை இங்குள்ள மக்களின் தேவைகளுக்கு ஏற்ற ஓர் அமைப்பை ஏற்படுத்த இயலும்''[10] என்று கூறப்பட்டு இருந்தது. அதற்கு அந்த மாநாட்டில் பதிலும் அளிக்கப்பட்டது. அதன்படி ''கோரிக்கைக்கு ஏற்ற ஒரு அமைப்பை நிறுவிக் கொள்ளலாம் ... கல்கத்தா கிளை அமைப்பானது சுயதேவை நிறைவுடன் செயலாற்ற வேண்டும் என்றும் சுதேச மக்களை உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும்[11]'' என்றும் அறிவுறுத்தப்பட்டது.

9. Dr. டி, யோகீசுவரன், தமிழ்க் கவிதைகளில் சமுதாயச் சிக்கல்கள். பக். 51.
10. பெ. சு. மணி, வீரமுரசு சுப்ரமணிய சிவா – பக். 20.
11. மேற்படி — பக். 21.

T 4741

இங்ஙனம் குரல்கொடுத்தவரை இனங்காண இயலாவிட்டாலும், தொழிலாளர் இயக்கத்தின் வழியே தேசிய விடுதலை இயக்கம் இந்தியாவிலே தோன்ற காலச் சூழல் இடம் அளிக்கவில்லை என்றே கருத வேண்டி உள்ளது.

1907 முதல் 1920 வரையில் காங்கிரஸ் வரலாற்றில் தீவிரவாதிகளின் செல்வாக்கு மிகுந்து இருந்த காலம். அந்த கால கட்டத்தில் காங்கிரஸ் ஏறக்குறைய பொதுவுடைமை நோக்கில் செயல்பட்டது. இதுபற்றி மார்லி தனது நாட்குறிப்பில், "கட்டுக் கோட்பாக விளங்கும் என்று நான் நம்பி இருந்த காங்கிரஸ் சிதறிப் போய் விட்டதைக் கூறும் செய்திகள் இப்பொழுது தான் வந்தன... மிதவாதிகள் மீது, தீவிரவாதிகள் கொண்ட வெற்றி யாகவே எனக்கு இது பொருள்படுகிறது ... காங்கிரஸ் எதிர் காலத்தில் தீவிரவாதிகளின் ஸ்தாபனமாக மாறிவிடும்"[12] என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

1905இல் எழுச்சியுற்ற முதல் ரஷ்யப் புரட்சி திலகர் போன்ற தீவிரவாதத் தலைவர்களை கவர்ந்தது. லஜபதிராய், பிபின் சந்திரபாலர், வ. உ. சி., அரவிந்தர் போன்றோர் தீவிரவாத செயல் வீரர்களாகத் திகழ்ந்தனர். "1900 ஆண்டுகளில் இந்தியாவில் 12 ரகசிய இயக்கங்கள் செயல்பட்டன. அவற்றில் சவர்க்காரின் பணி குறிப்பிடத் தக்கதாகும்"[13] 1926இல் பகத்சிங்கால் உருவாக்கப்பட்ட நவ்ஜவான் அமைப்பில் பூபேந்துரநாத்தத்தர், S. A. டாங்கே, பிரிட்டிஷ் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த பிலிப்ஸ்பார்ட் போன்றவர்கள் புரட்சிக்கருத்துக்களைப் பேசினர்.[14]

ஆப்கானிஸ்தான் வரையில் வந்துவிட்ட கம்யூனிஸ்ட் இந்தியாவில் பரவாமல் இருப்பதற்கு பிரிட்டிஷ் ஆட்சி தீவிரமாக கண்காணித்தது. திலகரை இருவழக்குகளில் தொடர்புபடுத்தி 12 ஆண்டுகள் தண்டனை அளிக்கப்பட்டது. அதே நேரத்தில் அரவிந்தர், வ. உ. சி. சிவா போன்றவர்களும் சிறையடைக்கப் பட்டனர், 1920 இல் ஏறக்குறைய தீவிரவாதம் வலிமை குன்றியது. 1934இல் பொதுவுடைமைக் கட்சி சட்ட விரோத மானது என்று அறிவிக்கப்பட்டது என்றாலும் அது மறைமுகமாகச் செயலாற்றியது. பின்னால் போரில்பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஆதரவாக கம்யூனிஸ்டுகள் செயலாற்றியதனால் தடைநீக்கப்பட்டது.

---

12. பெ. சு. மணி. — இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும். பக். 392
13. மேற்படி — பக் 394
14. மேற்படி — பக் 402

தமிழகமும் பொதுவுடைமையும் :

வங்காளத்திற்கு அடுத்ததாகத் தமிழகம் பொதுவுடைமை இயக்கம் தோன்றி வளர, பல செயல் வீரர்களை அக்காலத்தில் அளித்தது 1925 இல் கான்பூரில் இந்திய பொதுவுடைமைக் கட்சியை தோற்றுவிப்பதற்கு முன்பாக "இந்தியா பத்திரிக்கையின் பதிப்பாளரான M. P. திருமாலாச்சார்யா ஐரோப்பாவில் இருந்த இந்தியப் புரட்சியாளர்களுடன் இணைந்து கொண்டதுடன் 1919இல் லெனினைச் சந்தித்து உரையாடினார். 1920இல் அக்டோபர் மாதம் தாஷ்கண்டு நகரில் இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியைத் தோற்றுவித்ததுடன் அதன் தலைவராகவும் செயல் பட்டார்."[15] 1913இல் அமெரிக்காவில் ஏற்பட்ட இந்திய தீவிரவாத இயக்கத்துடன் சென்னையில் சிறை இருந்த நீலகண்ட பிரம்மச்சாரி தொடர்பு கொண்டு இருந்தார்.

முதல் உலகப் போரின்போது நாஞ்சில் நாட்டவரான டாக்டர் செண்பகராமன் ஜெர்மனியின் கெய்சர், கம்யூனிஸ்டின் அகிலம் போன்றவர்களின் துணையுடன் 'எம்டன்' என்ற கப்பல்மூலம் சென்னை நீதி மன்றத்திற்கு குறி வைத்து பிரிட்டிஷ் ஆட்சியாளரை ஆட்சியை விட்டு அகன்றும் நோக்குடன் குண்டு வீசினார்.

1923இல் மேமுதல் நாளில் தோழர் சிங்காரவேலு இந்தியாவில் முதல் செங்கொடியை ஏற்றி வைத்தார். அதே போல் வ.உ.சி கப்பல் துறைமுக ஊழியர்களுக்கென்று முதல் தொழிற் சங்கத்தை ஏற்படுத்தினார். 1911 இல் வ. உ. சியை தண்டித்த கலெக்டர் ஆஷ் வாஞ்சி நாதனால் சுடப்பட்டார்.

30இன் தொடக்கத்தில் ஈ. வெ. ரா. பொதுவுடை இயக்கத் துடன் தொடர்பு கொண்டிருந்ததுடன் குடியரசு பத்திரிக்கையில் லெனினைப்பற்றியும், ரஷ்யாவைப் பற்றியும் தொடர்ந்து எழுதினார். 1934 இல் சுயமரியாதை இயக்கத்தைவிட்டு வெளியேறினார். 1946 இல் சிங்காரவேலு மறையும் வரையில் பொதுவுடைமை நாட்டில் வளர சிறப்பானபணி ஆற்றினார். இவ்வாறு தமிழகம் ஒவ்வொருகாலத்தையும் நன்கு பயன்படுத்திக் கொண்டு பொதுவுடைமை நாட்டில் வளர அடிகோலியது.

இந்தியப் பொதுவுடைமை பற்றி ரஷ்யாவின் கருத்து :

திலகருக்கு 6 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை தரப்பட்ட போது பம்பாய் பஞ்சாலைத் தொழிலாளர்கள் 6 நாட்கள் பொது

15. 14. ரகுநாதன் - அக்டோபர் புரட்சியும் தமிழ் இலக்கியமும் பக்-9.

வேலை நிறுத்தம் செய்தனர் இது குறித்து லெனின், "இந்திய ஜனநாயக வாதியான திலகர் மீது பிரிட்டிஷ்குள்ளநரிகள் விதித்த இகழத்தக்க தண்டனையை...அவர் நாடு கடத்தப்பட்டிருப்பதை... ஒரு ஜனநாயக வாதியை இவ்வாறு பழிவாங்கி இருப்பதைக் கண்டித்து பம்பாயில் ஆர்ப்பாட்டங்களும் வேலை நிறுத்தங்களும் நடைபெற்றன"[16] என்று புராலிட்டாரி இதழில் எழுதியுள்ளார்.

இந்தியாவில் பொதுவுடைமை இயக்கம் தன்னை வெளிப் புடுத்திக் கொண்டபோதே தனியுடைமை ஒழிப்பு, அன்னிய ஏகாதிபத்திய மூலதன எதிர்ப்பு, தொழிலாளர் உரிமைக்குப் போராடுதல், சமதர்மத்தைத் தோற்றுவித்தல், தாழ்த்தப்பட்டோர், பெண்கள் ஆகியோருக்கு சமூகப்பாதுகாப்பு ஆகிய பல குறிக்கோள் களைத் தனது கொள்கையாகக் கொண்டு இருந்தது.

திராவிட இயக்கத்தின் தோற்றம்

1944-இல் திராவிடர் கழகம் சேலத்தில் தோன்றியது. என்றாலும் மற்ற இரு இயக்கங்களைப் போலவே மிகப்பெரிய தொரு பின்புலத்தைக் கொண்டுள்ளது. தீவிரவாத தேசியத்தால் வடக்கே இந்து-முஸ்லீம் வேற்றுமை விரிவடைந்ததைப் போல் தமிழ் நாட்டில் ஹோம்ரூல் இயக்கத்தால் பிராமணர் பிராமணர் அல்லாதாருடைய இயக்கம் பெரும் பிரச்சனையாக அமைந்தது.

1916இல் அன்னிபெசண்டு தோற்றுவித்த ஹோம்ரூல் இயக்கம் இந்து சமயச் சிறப்பினையும் குறிப்பாக பார்ப்பனர்களின் பெருமை யினையும் பாராட்டி வந்தது. இந்நிலை ஆங்கிலேயர்களுக்கு அப்பால் நாட்டில் பார்பனர்களின் ஆட்சியைத் தோற்றுவித்து விடுமோ? என்ற ஒரு ஐயம் மற்றவர்கள் மத்தியிலே எழுந்தது. அதன் விளைவாக பார்ப்பனர் அல்லாதவர்கள் 1917 இல் சென்னை மாகாண சங்கத்தை ஏற்படுத்தினர். அரசிடம் தங்களுக்கென பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்தனர்.

இதே நேரத்தில் தென்னிந்திய நல உரிமைச் சங்கம், டாக்டர் டி. எம். நாயர், பனகல் அரசர், டி. பி. தியாகராஜ செட்டியார் போன்றவர்களால் நடத்தப்பட்டது. இவர்கள் 'ஜஸ்டிஸ்' என்ற ஆங்கில நாளிதழை நடத்தினார்கள். இதன் பெயராலேயே 'ஜஸ்டிஸ் கட்சி' என்று பெயர் பெற்றது.

---

16. மேற்படி ப. 11.

'1920 இல் பார்ப்பனர் அல்லாதவர்கள் தங்களுக்கெனத் தனியே ஓர் அரசு வேண்டும் என்ற எண்ணத்தைப் பெறத் தொடங்கினர்'[17]

1925இல் வ. வே. சு. ஐயரின் குருகுல நிகழ்ச்சி அவர்களின் ஒற்றுமையை — ஒன்று பட்டு செயல்படவேண்டும் என்ற எண்ணத்தைத் தூண்டியது.

முதன் முதலில் 1920இல் 81 பேர்கள் நீதிக் கட்சியின் சார்பாக சட்டமன்றம் சென்றனர். 1923இல் நடைபெற்ற தேர்தலில் காங்கிரசின் சுயராஜ்யக்கட்சியை வென்று நீதிக் கட்சி ஆட்சிக்கு வந்தது. 1926ஆம் ஆண்டுத் தேர்தலில் சுயராஜ்யக் கட்சி வென்றாலும் பெரும்பான்மை இடம் கிடைக்காததால் சுயேட்சையான DR சுப்பராயன் நீதிக்கட்சியின் துணையோடு ஆட்சி அமைத்தார்.

1929ஆம் ஆண்டுத் தேர்தலில் சுயராஜ்யக் கட்சி ஒத்துழையாமைக் கொள்கைப்படி அரசு அமைக்கவில்லை. எனவே 1936 வரை நீதிக்கட்சியே அரசினை நடத்தி வந்தது.

நீதிக்கட்சியின் பதினாறு ஆண்டு கால ஆட்சி சமூகத்திற்கு மிகவும் பயன்பாடாக அமைந்தது. அரசு வேலை, குழந்தைகளின் ஆரம்பக் கல்வி போன்ற வசதிகள் பார்ப்பனர் அல்லாதவர்களுக்கு அதிகமாகக் கிடைத்தது. தமிழின் வளர்ச்சி கருதி அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டது. 1921இல் பெண்களுக்கு வாக்குரிமை தரப்பட்டது. வகுப்பு வாரி பிரதி நிதித்துவம் சட்டமாக்கப்பட்டது. தாழ்த்தப் பட்டோருக்கான தொழிலமைச்சகம் முதன்முறையாக அமைக்கப்பட்டது. "நீதிக் கட்சியின் ஆட்சி தமிழகத் தேசியம், திராவிட தேசியம் ஆகியவற்றின் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக இருந்தது".[18]

1929இல் அரசுப்பணியாளர் தேர்வாணைக்குழு நாட்டிலேயே முதன் முதலாக நீதிக்கட்சியினால் ஏற்படுத்தப்பட்டது.

பார்ப்பனர்கள் அல்லாதவர் என்றவுடன் அனைத்து வேலைகளும் முதலியார், ரெட்டியார், வன்னியர், போன்ற மேல்மட்டத்து மக்களே ஆட்கொண்டனர். 1922-ஆம் நாட்டில் P.T தியாகராஜ செட்டியார் "தீண்டப்படாதார் எதிர்ப்பு' மசோதாவை ஆதரிக்க மறுத்து விட்டார். எனவே 1934இல் பிற்பட்ட மக்கள் தங்கள்

17. சே. ராஜேந்திரன், தமிழ்க் கவிதைகளில் திராவிட இயக்கத்தின் தாக்கம். பக். 51.

18. சே. ராஜேந்திரன், தமிழ்க் கவிதைகளில் திராவிட இயக்கத்தின் தாக்கம். பு. 53.

நலனுக்காகத் தனி இயக்கம் கண்டனர். நீதிக்கட்சியின் ஒற்றுமை யின்மை அதன் வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று. இரட்டை ஆட்சி முறையில் கிடைத்த சிறு வசதிகளைக் கொண்டு மக்களுக்குப் பெருந் தொண்டாற்றி வெற்றி பெற்ற ஆட்சி நீதிக்கட்சியே ஆகும். இதனையே, 'இந்த நாட்டில் வேறு எந்தத் தனி இயக்கமும் செய்ய முடியாத சாதனையை நீதிக்கட்சி சாதித்திருக்கிறது[19] என J. M நல்லாசாமியின் கூற்றுடன் ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

1925இல் காஞ்சிபுரம் காங்கிரசு மாநாட்டில் பெரியார்கட்சியில் இருந்து வெளியேறினார். தொடர்ந்து தன்மானத் தமிழர் இயக்கம் என்ற அமைப்பைத் தொடங்கினார். தன்னுடைய தன்மானத்தை பாதுகாத்துக்கொள்ள முடியாத போது நாட்டு விடுதலையை விரும்புவதில் பொருளில்லை.'' [20] என்ற காந்தியின் கொள்கை பெரியாரிடம் ஒரு அமைப்பினை ஏற்படுத்த அடிகோலியது. தன் மான இயக்கம் சமுதாயத்தின் எல்லாத் துறைகளிலும் விழிப் புணர்ச்சியை உண்டாக்க முயன்றது. மனித சமுதாயத்தையே மாற்றி அமைக்கும் எண்ணங் கொண்டதாகச் செயல்பட்டது. சாதி பேதம், மதநம்பிக்கை வருணாசிரமபிரிவு, தீண்டாமை, போன்றவை களை ஒழிப்பதில் முனைப்புடன் செயல்பட்டது.

1938இல் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கம் செய்யப் பட்டது. வடவர் ஆதிக்க எதிர்ப்புக்காக நாட்டின் விடுதலை நாளை துக்கநாளாகக் கொண்டனர் 1930. இல் சிந்தனையாளர் கழகம், பகுத்தறிவாளர் கழகம் போன்ற உள் அமைப்புகளை ஈ. வெ. ரா.தொடங்கினார். இந்த இயக்கத்தினை பற்றி பெரியார் கடைசி மூடநம்பிக்கைக்காரன் இந்த நாட்டில் இருக்கின்ற வரையிலும் தன்மான இயக்கத்திற்கு வேலை உண்டு என்றார்.

1944 இல் சேலம் மாநாட்டில் நீதிக் கட்சியும், தன்மான இயக்கமும் இணைந்து விட்டது. இதனால் சிங்காரவேலு செட்டியார் போன்ற 'சமதர்ம கட்சி' அமைப்பாளர்கள் சுயமரியாதை இயக்கத்தை விட்டு வெளியேறினர். சேலம் மாநாட்டில் அண்ணாவினால் நீதிக் கட்சியைத் திராவிடர் கழகமாக மாற்ற வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார். 1946இல் கழகக் கொடியும் உருவாக்கப்பட்டது.

---

19. மேற்படி பக். 55.
20. சே. இராசேந்திரன்-தமிழ்க் கவிதையில் திராவிட இயக்கத்தின் தாக்கம் - பக்86

தனித் தமிழ் இயக்கம் :

1916 இல் தன்மான இயக்கக் கொள்கையினை அடியொற்றி தனித்தமிழ் இயக்கமும், தமிழிசை இயக்கமும் தோன்றி திராவிடர் - தமிழர் உணர்வினை மேம்படச் செய்தது.

தனித் தமிழ் இயக்கத்தை மறைமலை அடிகள் தொடங்கினார். ஆரியக் கடவுளும், சமயமும் தமிழ் சமூகத்தில் ஊடுருவித் தமிழருடைய வாழ்வைக் குலைத்து விட்டது என்று தனித் தமிழ் இயக்கம் கருதியது. இந்நிலையை மாற்றுவதற்குத் தனித்தமிழ் இயக்கம் முயன்றது. தமிழரை அடிமைப் படுத்தும் சாதிமுறை ஆரியருக்கு உரியது என்றும் மறைமலை அறிவித்தார்.

தமிழை, தமிழ்ப் பண்பாட்டை. ஆரியம் அழித்துவிட—அடிமைப் படுத்திவிடக் கூடாது என்பதற்காகவே இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடங்கினார். பின்னால் ஈ. வெ. ரா. வினால் 1948 இல் நடத்தப்பட்ட இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிக்கு தனித்தமிழ் இயக்கம் அடித்தளமிட்டது. தனித்தமிழ் இயக்கம், தமிழின் மறுமலர்ச்சிக்கும், தமிழின மறுமலர்சிக்கும் உந்துதலாக அமைந்தது

தமிழிசை இயக்கம் :

திராவிட இனப் போராட்டத்தின் ஒரு கிளை அமைப்பாக தமிழிசை என்ற முழக்கம் 1917இல் எழுந்தாலும் 1940இல் செட்டி நாட்டரசர் அண்ணாமலை அவர்கள் ஒரு அறக்கட்டளையை நிறுவி இப்பணியைத் தொடக்கி வைத்தார். தொடர்ந்து 1941 - இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழிசை மாநாட்டை நடத்தியது. அண்ணாமலை அரசரின் பொருளுதவியாலும் R. K. சண்முகஞ் செட்டியாரின் பெருமுயற்சியாலும் இசைத்தமிழ் தமிழிசையாக மீண்டும் புத்துயிர் பெற்றது.

பார்ப்பனர்-பார்ப்பனர் அல்லாதார் உயர்வு தாழ்வு இசையிலும் வெளிப்பட்டது. இது பார்ப்பனரல்லாதவர்களின் தன்மானத்தைப் பாதிப்பதாக இருப்பதால் தமிழிசைக் கிளர்ச்சிக்கு பாடுபட வேண்டி உள்ளது என்ற கருத்தை பெரியார் வலியுறுத்தினார்.

தமிழிசை இயக்க வளர்ச்சியினால் தமிழரின் சமுதாயப் பிறவி இழிவு நீங்கும் என்பதில் பெரியார் நம்பிக்கையுடன் செயல்பட்டார். தமிழனுடைய மொழி, கலை ஆகியவற்றை எதிர்த்தால் அவனுடைய உள்ளத்தில வேதனை பிறக்கும் அது தமிழ்நாடு தமிழருக்கே என்ற எண்ணத்தை உருவாக்க உதவும் என்று அண்ணா கருத்துரைத்தார்.

திராவிட முன்னேற்றக் கழகம் :

திராவிட முன்னேற்றக் கழகம் 1949இல் அண்ணாவால் தொடங்கப் பட்டது. பெரியாரிடம் அவர் கொண்டிருந்த முரண்பாடுகளை எண்ணி பெரியாரின் 2ஆம் திருமணத்தினை ஒரு காரணமாகக் காட்டி தனித்து செயல்பட பெரியாரின் திராவிடக் கழகத்தை விட்டு வெளியேறினார். கழகத்தின் பொதுச் செயலாளராக அண்ணா தேர்ந்தெடுக்கப்பட்டார். கட்சிக்கு தலைவர் என்றுயாரையும் தேர்வு செய்யவில்லை அது பெரியார் ஒருவருக்கேத்தான் என்று அண்ணா அறிவித்தார்.

திராவிடர் கழகத்தின் அடிப்படைக் கொள்கையின் மீதேதான் திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது என்று அண்ணா தம் கட்சியின் கொள்கைகளைப் பற்றி தெளிவு படுத்தினார். சமுதாயத் துறையிலே சீர்திருத்தம், சமதருமக் குறிக்கோள், அரசியலில் வடநாட்டு ஏகாதிபத்தியத்தினின்று விடுதலை ஆகிய கொள்கைகள் தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்பாடுகளாகும் என்று கருத்துக் கூறினார்.

இந்தி மொழியை எதிர்ப்பது வடநாட்டு ஆதிக்க எதிர்ப்புக்காக ஆகும். இந்தியை எதிர்பதில் இருமுகமும் இரட்டை குழல் துப்பாக்கி என்று அண்ணா கூறினார். 1960இல் தனிநாடு கோரிக்கைக்காக சென்னையில் மாநாடு நடத்தப்பட்டது. 1968இல் இந்தி எதிர்பினைக் காட்ட அரசியல் சட்டத்தின் 17 ஆவது பிரிவு தி.மு.கவினரால கொளுத்தப்பட்டது. அப்போது, இந்தியை எதிர்க்காவிட்டால் தமிழுணர்வு இருக்காது; தமிழ் உணர்வு இல்லாவிட்டால் திராவிடர் என்ற இன உணர்வு எழாது திராவிடர் என்ற இன உணர்வு எழாவிட்டால் திராவிட நாடு திராவிடருக்கே என்ற உணர்ச்சி வராது என்று அண்ணா தனது இந்தி எதிர்புக் கொள்கையை விளக்கினார்.

1953இல் இராஜாஜி கொண்டு வந்த குலக்கல்வி முறை கொடுமையானது. ஆபத்தானது என்று கூறி தி.மு.க. இராஜாஜியின் இல்லத்தின் முன்பாக போராட்டத்தை நடத்தியது.

1954இல் நில உச்ச வரம்பு சட்டம் கொண்டு வரவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

1959இல் உழவனுக்கே நிலம் சொந்தம் என்பதற்கு நிலச் சீர்திருத்தக் குழுவை அமைத்தது. சென்னை மாகாணம் என்பதை 'தமிழ்நாடு' என்று பெயர் மாற்றம் வேண்டும் என்று போராடியது.

கழகத்தின் கொள்கை திட்டம் நாட்டில் பரப்பப் பட்டது. அதற்காக நாடு முழுமையம் 600க்கும் அதிகமான கிளைக் கழகங்கள் தொடங்கப்பட்டன.

தமிழின் வளர்ச்சிக்கென பல நடவடிக்கைகளை அண்ணா தனது ஆட்சிக் காலத்தில் செயல் படுத்தினார். உலகத் தமிழ் மாநாடு, குறளுக்கு சிறப்பிடம் போன்றவை அவர்களது தமிழ்ப் பணிகளில் குறிப்பிடத் தக்கவையாகும்.

முடிவுரை :

ஆங்கில அரசு இந்தியாவில் எடுத்த சில பல நடவடிக்கைகள் பல மாற்றங்களைத் தோற்றுவித்தன. இவர்களால் உருவாக்கப் பட்ட மத்திய தர வர்க்கம் இந்திய தேசியத்திற்கு வித்திட்டது. சமயச் சீர்திருத்த இயக்கங்களும் பின்னர் அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகளைக் கொண்ட இயக்கங்களும் தோன்றி நாட்டின் தேசிய வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தன.

சமுதாயத்தில் மேல் மட்ட மக்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடுகின்றபோது அவரினும் தாழ்நிலையில் உள்ள மக்கள் விழிப்புணர்வு அடைகின்ற நிலையில் உரிமைப் போரினைத் தொடங்குவர் என்பதைப் பொதுவுடைமை, திராவிட இயக்கம் போன்றவற்றின் வளர்ச்சி எடுத்துக் காட்டுகின்றன. மொழி யுணர்வு என்பது இயக்கங்களுக்கு அப்பால் ஓர் ஒற்றுமை உணர்வை தோற்றுவிக்கக் கூடியது என்பதை இந்தி எதிர்ப்பு இயக்கம் தெளிவுபடுத்துகின்றது.

சுருங்க கூறினால் நாடளாவிய இயக்கங்கள் தங்கள் பிரச்சனை களுக்கு தீர்வு காணாது என்று கருதியபோது திராவிட இயக்கம் போன்றவை எழுந்தது. இன அடிப்படையில் தோன்றிய இவ்வியக்கங்களுடன் இணைந்தும், வேறு நிலைகளில் வேறுபட்டும் மொழியுணர்வு இயக்கங்கள் தோன்றின என்று கூறலாம்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

ஒருபொருட் - பலசொல் அகராதிப் பதிவு

பெ. மாதையன்,
விரிவுரையாளர்
தமிழ்ப் பல்கலைக் கழகம்.

அப்பல்வகைப் பொருள்களில் எப்பொருள் என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

(எ-டு) 1. மருதம் — See மருது (ஐங்குறு. 74)

2. மருது — 1. Arjuna, நீர்மருது.
— 2. Black winged myrobalan, See கருமருது.
— 3. flowering maurdha, See பூமருது.

மருதம் எனும் ஐங்குறுநூற்றுச் சொல் 'மருது' எனும் சொல்லிற்குரிய முப்பொருள்களில் எப்பொருளினது என்பதைக் கட்டாயம் குறித்துக் காட்டுதல் வேண்டும்.

5. 4 இருசொல் - பொருள் விளக்கம்

இரண்டு சொற்கள் ஒரே பொருளில் வருகின்றபொழுது இரண்டையும் ஒன்றுக்கொன்று குறுக்கு நோக்கீடாய்க் கொடுப்பதுடன் ஆங்கிலப் பெயர், தாவரவியற்பெயர் ஆகியவற்றைக் கொடுப்பதென்பது முறையான பொருள் விளக்கமாகாது. இரண்டில் ஏதாவதொரு சொல்லைத் தேவையான அளவு விளக்கிவிட்டு அதனைப் பிறிதொரு சொல்லுக்குக் குறுக்கு நோக்கீடாய்க் கொடுத்தல் முறையானது.

X = Y + ஆங்கிலப்பொருள் + தாவரவியற்பெயர்
Y = X + ஆங்கிலப்பொருள் + தாவரவியற்பெயர்

என அமைக்காமல்

X—தமிழ்விளக்கம் + ஆங்கிலப்பொருள் + தாவரவியற் பெயர் + காண்க Y

Y—காண்க X

என அமைத்தல் வேண்டும்.

1. கத்தூரி வெண்டை — காண்க இரட்டகத்துத்தி
Musk mallow, hairy shrub·
Hibiscus abelmoschns,
காண்க இரட்டகத்துத்தி.

2. இரட்டகத்துத்தி — காண்க கத்தூரி வெண்டை
Musk mallow, hairy shurb;
Hibiscus abelmoschus,

என அமைக்காமல்

1. கத்தூரி வெண்டை — குத்துச்செடிவகை;
Muskmallow,hairyshnrb,
Hibisous abelmoschus,
காண்க இரட்டகத்துத்தி.

2. இரட்டகத்துத்தி — காண்க கத்தூரி வெண்டை
என அமைத்தல் போதுமானது.

பொருட் சூழலில் ஒத்த தன்மையுடைய சொற்களை, வேறுபட்ட பொருட்சூழல் இல்லாத சொற்களை ஒன்றுக்கொன்று குறுக்கு நோக்கீடாய்க்கொடுக்கும் சூழலில் அச்சொற்களில் ஒன்றை நிறைவான நிலையில் விளக்குதல் வேண்டும் 2 என சுகுஸ்தா குறிப்பிடுவதை இங்கே நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒருமொழி அகராதிகளில் ஒருபொருட் பலசொற்களைக் கொடுப்பது குறித்து அவர் இவ்வாறு கூறுகிறார். எனவே ஒருமொழி அகராதித் தொகுப்பாளர் இதில் கவனமாக இருந்து ஒருசொல்லை அஃதாவது குறுக்கு நோக்கீடாய்க் கொடுக்கப்படும் சொல்லை உரிய இடத்தில் செம்மையாக விளக்கிவிடுதல் வேண்டும்.

5.5 ஒருபொருட் பலசொல்—கூடுதல் விளக்கம்

ஒருமொழி அகராதிகளில் ஒருபொருட் பன்மொழிகளை விளக்குதல் பற்றிக் குறிப்பிடும் போது சுகுஸ்தா இருவகை நெறிகளைக் குறிப்பிடுகின்றார். 1. பொருள் விளக்கத்தோடு கூடுதலாக ஒருபொருட் பன்மொழிகளைக் கொடுத்தல், 2. அவ்வாறன்றி ஒருபொருட் பன்மொழிகளை மட்டுமே குறிப்பிடல். நமது ஒருமொழி அகராதிகள் இத்தகு பொருள் விளக்க நெறிகளைக் கைக்கொள்வது அவசியத் தேவையாயுள்ளது.

பாதோசம் — Lotus as water-born
(நீரிலுண்டாவது) தாமரை

பாம்புண்பறவை — Lit snake - eating bird
(பாம்பை யுண்ணும் பறவை)
Garuda, கருடன்.

முகுரவாணன் — திருதராட்டிரன்
(கண்ணாடிப் பிரதி பிம்பம் போலப் பிறரைக் காணாத முகமுடையவன்)
as having sightless like the image in a mirror.

எனச் சென்னைப் பல்கலைக் கழகம் பேரகராதி கூடுதலானபொருள் விளக்கத்தோடு ஒருபொருட் பன்மொழிகளையும் கொடுத்தல் போன்று ஒருமொழி அகராதிகளும் பதிவுகளை அமைத்தல் வேண்டும். இத்தகைய பொருள் விளக்கங்கள் ஒருபொருட் பன்மொழிகளின் ஆக்கத்திற்கான காரணத்தையும் தரும் தன்மையினவாய் அமைகின்றன.

இரண்டாவது நெறியில் ஒரு பொருட் பன்மொழிகளைக் கொடுக்கும் போது சில கூடுதலான குறிப்புகளையும் கொடுக்கலாம்.

முடிச்சவிழ்த்தல்	—	To steal,	திருடுதல் Loc
முடுக்கம்	—	Tightness,	இறுகல் (Nan)
பார்கிலும்	—	பார்க்க	Collo.[3]

எனச் சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி பேச்சுவழக்கு, வட்டாரவழக்கு எனக் குறிப்பிடுவதைப் போன்று ஒருமொழி அகராதிகளும் கொடுத்தல் வேண்டும். இருமொழி அகராதிகளில் பிறமொழிகளில் மட்டும் கொடுக்காது இருமொழிகளிலும் கொடுத்தல் வேண்டும்.

——O——

1. Stephen Ullmann, Semantics - An introduction to the science of meaning P. 144.
2. Zgusta, Manual of Lexicography, P. 261, Foot Note. 129.
3. „ „ P. 260, 261.

துணை நூல்கள் :

1. தமிழ்மொழியகராதி — நா. கதிரை வேற்பிள்ளை, ஏசியன், எடுகேஷனல் சர்வீஸஸ் புதுதில்லி, ஆறாம் பதிப்பு 1981.

2. Manual of Lexicography — Ladislav Zgnsta, Mounton, The Hague, 1971.

3. Semantics. An introduc tion to the science of Meaning. — Stephen Ullmann, Basil Blackwell, OXford.1983.

4. Tamil English Dictionary of Medicine, Chemistry, Botany and Allied Sciences. — T. V. Sambasivam Pillai G. D. Naidu Charities, Coimbatore, 1977.

5. Tamil Lexicon Vol. I. VI — University of Madras, Madras. 1982.

6. .... Supplement part-I. — University of Madras, Madras. 1982.

இராமலிங்க வள்ளலாரும் திரு நாராயண குருவும் – ஆன்மீக வளர்ச்சி

டாக்டர். நா. ஆறுமுகம்,
தமிழ் இணைப் பேராசிரியர்,
புதுவைப் பல்கலைக் கழகம், காரைக்கால் – 609 602

உலகம் வாழத் தாம் வாழும் அருளாளர்கள் பலர் தோன்றிய நாடு நம் பாரதநாடு. 1823 இல் **தமிழகத்தில்** சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தைத் தோற்றுவித்த அருட்பிரகாச இராமலிங்க வள்ளலாரும், 1824 இல் **குசராத்து** மாநிலத்தில் ஆரிய சமாசத்தை நிலைநிறுத்திய தயானந்த சரஸ்வதி அவர்களும், 1836 இல் **வங்காளத்தில்** இராமகிருஷ்ண சங்கம் தோன்றுவதற்குக் காரணரா யிருந்து ஸ்ரீ இராமகிருஷ்ணரும், 1854 இல் **கேரளத்தில்** ஸ்ரீ நாராயண குரு தர்ம பரிபாலன யோகம் (எஸ். என். டி. பி யோகம்) அமைத்த ஸ்ரீ திரு நாராயண குருவும் தோன்றினார்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் பிற்பகுதியிலு மாக முப்பதாண்டுக்கால இடைவெளியில் தோன்றிய இராமலிங்க வள்ளலாரும், திரு நாராயண குருவும் ஆன்மிகம், சமூகச் சீர்திருத்தம், இலக்கியம் ஆகிய மூன்று துறைகளிலும் சிறந்து விளங்கினர். அவ்விருவரின் வாழ்க்கையினையும் ஆன்மிக வளர்ச்சியினையும் ஒப்பிட்டுக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில், 'வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி மக்களென்றால் சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும்' நம் பாரத நாட்டின் தென் கோடியில், இயற்கையன்னையின் எழில் குலுங்கும் கேரள மாநிலத்தில் சாதிக்கொடுமை தலைவிரித்தாடியது. வறுமையும் அறியாமையும் தாழ்த்தப்பட்ட ஜாதியினரின் உடைமையாயிருந்தன. மேல் சாதியினரின் மேன்மைக்காக உழைத்து உருக்குலைந்து போவதே அவர்களுடைய கடமையாயிருந்தது. மேல் சாதியினரின் பார்வைக்கு முன்னால் கீழ்ச்சாதி ஆண்கள் மட்டுமல்லாமல் பெண்களும் மேலாடையின்றிச் செல்ல வற்புறுத்தப்பட்டனர். கொடுமை நிறைந்து மேலாடை சொற்போராட்டம் (The breast cloth Controversy) என்னும் நிகழ்ச்சி திருவாங்கூர் மாநிலத்தில்தான் நடைபெற்றது. நினைவுக்கு எட்டும் வரலாற்றுக் காலத்தில் உலகத்திலேயே இந்தியாவைத் தவிர வேறெந்த நாட்டிலும் இப்படிப்பட்ட கொடுமை நடந்ததற்குச் சான்றுகள் இல்லை,

அந்தக் காலத்தில் கிறித்தவ சமயம் இந்தக் கொடுமைக்குச் சிறிதுவழி கண்டது. கிறித்தவச் சமயத்தைத் தழுவின கீழ்ச்சாதிப் பெண்கள் – நாடார் குலப் பெண்கள் - மேலாடையணிந்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர். ஆனால், நாடார் குலப் பெண்கள் மேலாடையணியக் கூடாது என்று இந்து சமயத்தைச் சார்ந்த உயர்சாதியினர் 1822 இல் மாவட்ட நீதிபதியிடம் வழக்குத் தொடுத்தார்கள். வெற்றி நாடார் குலப் பெண்களுக்கே கிடைத்தது. அதாவது அவர்கள் மேலாடையணியலாம் என்று நீதி மன்றம் தீர்ப்பளித்தது. ஆனால், நிலைமை மீண்டும் நெருக்கடியாயிற்று!

1828 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் உயர்சாதி இந்துக்கள் மேலாடையணிந்து சென்ற கீழ்ச்சாதிப் பெண்களை அடித்து அவர்களுடைய மேலாடைகளைக் கிழித்து எறிந்தார்கள். அதன் காரணமாகப் பெரிய கடுமையான கலகமே மூண்டு அதை அடக்குவதற்காக இராணுவமும் அழைக்கப்பட்டது. அதன் விளைவாகத் திருவாங்கூர் அரசு கீழ்ச்சாதிப் பெண்கள் மேலாடையணியக் கூடாது என்று ஆணை பிறப்பித்தது! பிறகு கிறித்தவப் பாதிரியார்கள் கீழ்ச்சாதியினருக்காகத் துணை நின்று போராடினார்கள். அதன் காரணமாக மறுபடியும் 1858 இல் உயர்சாதி இந்துக்கள் செய்த கலகத்திற்குப் பிறகு 1859 ஆம் ஆண்டு சூலைத் திங்களில் சட்டப்படி கீழ்ச்சாதிப் பெண்கள் மேலாடையணியும் உரிமை பெற்றனர். இப்படிப்பட்ட பின்னணியில்தான், கேரள மாநில முன்னாள் முதலமைச்சர் ஈ. எம். எஸ். நம்பூதிரிபாத் அவர்கள் சரியாகக் குறிப்பிட்டுள்ளதைப் போல 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எல்லா வகையான கொடுமைகளும் கேடுகளும் நிறைந்து நாகரிக முதிர்ச்சியற்ற திருந்தாத சமுதாயத்தில் திரு நாராயண குரு தோன்றினார்.

1854 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் திருவனந்த புரத்துக்கு வடகிழக்கே ஐந்து கல் தொலைவில் உள்ள செம்பழந்தி என்னும் சிற்றூரில் ஓர் ஏழை உழவர் குடும்பத்தில் ஈழவக் குலத்தில் தோன்றிய நாராயண குருவின் தந்தையார் பெயர் மாடன் ஆசான்; தாயார் பெயர் குட்டியம்மாள். பெற்றோர்கள் அவருக்கு இட்ட பெயர் நாணு. ஈழவக் குலம் தாழ்த்தப்பட்ட இனங்களுள் ஒன்றான தால் நாராயணகுரு இளமையில் தாம் பிறந்தசாதிக்குரிய கொடுமை களையும் இழிவுகளையும் ஏற்றுக்கொண்டு வளர்ந்து வந்தார். அதனால் சாதி வேறுபாட்டின்- தீண்டாமையின்- போலித் தன்மையைச் சாடினார்.

•பிரமனின் முகத்தில் பிறந்தவன் பார்ப்பனன் என்றும், தோளில் பிறந்தவன் சத்திரியன் என்றும், இடுப்பில் பிறந்தவன் வைசியன் என்றும், காலில் பிறந்தவன் சூத்திரன் என்றும் உலகமாந்தரிடையில் பாராட்டப்பெறும் ஏமாற்றுமொழிகளைக் கடிந்து நீக்கினார்.

நாராயண குருவின் இரத்தத்தில் பழங்கால மரபு ஊறிப் போயிருந்தது. கேரள நாட்டின் வரலாறும் பாரம்பரியமும் அவருக்கு உணவாகவும் குடி நீராகவும் இருந்தன. இளமையின் தொடக்கத்தில் கண்ணனை வழிபட்ட அவர் பிறகு சுப்பிமரணிய பக்தரானார். சிறிது காலம் ஆசிரியராய்ப் பணியாற்றிப் பெற்றோர்களைக் காப்பாற்றிய அவர் அடிக்கடி ஆன்ம சோதனைக்கு இலக்காகித் தீவிரத் துறவு வாழ்க்கையை மேற்கொண்டார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வரி தண்டியவர்களின் கொடுமைகள் மிகுதியாயிருந்தன. ஊருக்கு ஒரு வரி, குலத்துக்கு ஒரு வரி, என்ற சிக்கலான முறைகேடான சட்டங்கள் மாறித் தமிழகம் முழுவதற்கும் ஒரே அரசியல், ஒரே நீதி என்ற ஒருமைப்பாடு நிறுவப்பட்டது ஆங்கிலேயரால்!

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் ஒழுங்குமுறைச் சட்டத்தின் The Charter Act of கீழ் (1833) இந்திய மண்ணில் எந்த இந்தியனுக்கும் இடம், நிறம், சாதி, சமயம் ஆகியவற்றின் பெயரால் அரசாங்கத்தின் கீழ்ப் பணிபுரியும் உரிமை மறுக்கப் படலாகாது என்று விதிகள் வகுக்கப்பட்டு நடைமுறைக்கு வந்தன.

தமிழர்கள் புதுமையைப் புறக்கணிக்காதவர்கள். ஓராயிரம் ஆண்டுகளுக்கு, மேலாகவே பன்னாட்டு மக்கள் தமிழ் நாட்டில் இடம்பெற்றுத் தமிழருடன் இணங்கி வாழ்ந்து வருகின்றனர். பல பெரும் சமயங்கள் தமிழகத்தில் இணைந்து வளர்ந்து வந்துள்ளன, அச்சமயங்களின் கருத்துகளை எல்லாம் தம் கருத்துகளாகவே மாற்றிக்கொண்டு விட்டனர். ஆட்சி செய்யவும் சமயப் பணி புரியவும் வணிகம் செய்யவும் பல்வேறு கைத்தொழில்கள் புரிந்து பிழைக்கவும் தமிழகம் புகுந்த அயல் நாட்டு மக்கள் தாமும் தமிழராகவே மாறித் தமிழருடன் கலந்து உறவாடி வந்துள்ளனர்.

மக்களிடையே நூற்றுக்கணக்கான குலங்கள் பெருகி விட்டிருந்தன. ஒரே குலத்தினர் அவர்கள் வாழ்ந்த இடத்துக் கேற்ப பல மொழிகளைப் பேசினர். ஆங்கிலேயர் வரவுக்குப் பிறகு பறையர் என்று ஒதுக்கி வைக்கப்பட்ட குலத்தினர் கிறித்தவர் களாக மதம்மாறிச் சமூகத்தில் மேனிலை எய்தினர், சிலர்

ஆங்கிலேயர்களுக்குப் பணிகள் செய்து குடிநலம் பெற்றனர். வலங்கை இடங்கை வகுப்பினரிடையே ஏற்பட்டிருந்த பூசல் பத்தொன்பதாம் நூற்றாண்டில் கொலையிலும் கொள்ளையிலும் முடிந்ததுண்டு. அப்பூசல்கள் அனைத்தும் இரு வகுப்பினரும் அனுபவித்த சில உரிமைகளைப் பற்றியனவாகவே எழுந்தன. இடங்கையினர் அனைவரும் தொழிலாளர்கள். கிழக்கிந்தியக் கம்பெனிக்கு அவர்களுடைய வணிகத்தில் உதவி வந்தவர்கள். காஞ்சிபுரத்தில் வடகலை, தென்கலை வைணவர்களுக்கிடையே போராட்டங்கள் தோன்றி அவற்றை இரு கட்சியினரும் அரசாங்கத்தின் தீர்ப்புக்கு விட்டனர்.

பொதுமக்களுக்குக் கல்வி கற்கும் வாய்ப்பு மிகவும் குறைவாகக் காணப்பட்டது. கிராமங்களில் சிறு சிறு திண்ணைப் பள்ளிக்கூடங்களைத் தனித்தனி ஆசிரியர்கள் நடத்திவந்தனர். திண்ணைப் பள்ளிகளில் சேர்ந்து படிக்கும் வாய்ப்பு ஒரு சில உயர் குலத்தினருக்கே கிடைத்தது. தொழிலாளர்கள் தம் மக்களை இளமையிலேயே தத்தம் குலத் தொழிலில் ஈடுபடுத்திப் பயிற்சியளித்து வந்தனர்.

1854 இல் ஆங்கில அரசு கல்வி வளர்ச்சிக்காக ஆங்கிலக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தது. அரசு கல்வித்துறை அமைத்து அதன் மூலம் பள்ளிகளையும் கல்லூரிகளையும் நடத்தியது. பிரெஞ்சுப் புரட்சியும் அமெரிக்காவின் சுதந்திரப் போராட்டமும் நம் மக்களின் சிந்தனையைக் கிளறின. மூடப் பழக்க வழக்கங்களுக்கும் சாதி நீதிகளுக்கும் கட்டுப்பட்டுக் கிடந்த இந்தியர் விழிப்புற்று எழுந்தனர். கிறிஸ்தவப் பாதிரிமார்கள் ஆங்கில அரசாங்கத்தின் ஆதரவில் மதமாற்றப் பணியில் ஈடுபட்டனர். அவர்கள் இந்து சமயத்தையும் கடவுளரையும் இழித்துப் பேசிவந்தனர். சைவ வைணவ வாதங்களும் எதிர் வாதங்களும், வேதாந்த, சித்தாந்தப் பூசல்களும் பெருகின.

வட இந்தியாவில் ராஜாராம் மோகன்ராய், தேவேந்திரநாத், தாகூர், கேசவ சந்திரசென், தயானந்த சரஸ்வதி, இராமகிருஷ்ணப் பரமஹம்சர் ஆகியோர் இந்து சமயக் கோட்பாடுகளில் பல அடிப்படையான புரட்சிகரமான திருத்தங்கள் செய்தனர். இந்தச் சூழ்நிலையில்தான் தமிழகத்தில் இராமலிங்க அடிகள் சிதம்பரத்திற்கு அருகில் உள்ள மருதூரில் கருணிகர் குலத்தில் தோன்றினார்; இளமை சென்னையில் கழிந்தது; சமயத் துறையிலும் சமூகத் துறையிலும் பல புரட்சிகரமான மாறுதல்களைச் செய்தார்.

வள்ளலார் சமய வழக்கில் ஏற்பட்டிருந்த பல தீய சடங்கு களையும் மரபுகளையும் அறவே ஒழிக்க முயன்றார். புராணங் களையும் சாத்திரங்களையும் வெறும் கற்பனைகள் என்றும் அவை அறிவு வளர்ச்சிக்கு இடப்பட்ட தளைகள் என்றும் கூறிக், 'கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும் கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப்போக' என்று அவற்றின் மேல் வெறுப்பைக் கொட்டினார்.

சிறந்த சிவ பக்தராகவும் முருகபக்தராகவும் விளங்கின வள்ள லாரும் இளமையிலேயே துறவு பூண்டு மனித சஞ்சாரமில்லாத தோட்டம் தோப்பு போன்ற இடங்களில் இரவும்பகலும் தூக்கமின்றி அலைந்து திரிந்தார். இருவரும் பசித்திருந்தனர், தனித்திருந்தனர் ! விழித்திருந்தனர் ஆன்மிகம், சமூகச்சீர்திருத்தம், இலக்கியம் ஆகிய மூன்று துறைகளிலும் இருவரும் சிறந்து விளங்கினர்.

மனித சமுதாயத்தின் துன்பங்களையும் துயரங்களையும் தம் வாழ்வில் கண்டுணர்ந்த இவர்கள் இருவரும், அவற்றின் தீர்வுக்கான வழி வகைகளைக் கவிதை வடிவத்தில் வெளிப்படுத்திய சமூக மருத்துவர்களாக இருந்தனர்.

*திருக்கோயில்களுக்கெல்லாம் சென்று வழிபாடு செய்துவந்த நாராயண குரு உள்ளொளி பெற்றுத் திகழ்ந்தார். உண்மை ஞானியாகி ஞான வாழ்வை மேற்கொண்டார்.

1. ஏதுமற்ற ஏழைகளிடத்தில் இரக்கங்கொண்டு அன்பு செலுத்துவது.
2. நோயாளிகளிடத்தில் பாசங்கொண்டு பரிவு காட்டுவது.
3. ஆதரவற்ற உடைந்த உள்ளங்களிடத்தில் உறவுகொண்டு உதவி செய்வது.

இவை நாராயண குருவின் கொள்கைகளாயின. ஆகவே, துன்பமுடையும் உயிர்களைக் கண்டபோதெல்லாம் தாமும் துன்பமுற்றார். இரவலரைப் போன்று எங்குந்திரிந்த இவர் ஏழையர் வாழும் பகுதியில் அவர்களுடன் கலந்து வாழ விரும்பினார்.

"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் ;
பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறாது அயர்ந்த வெற்றரைக் கண்டுளம்
பதைத்தேன்

நீடிய பிணியால் வருந்துகின் றோர்என் நேருறக் கண்டுளம் துடித்தேன்
ஈடின் மானிகளாய் ஏழைகளாய் நெஞ்(சு) இளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்''

* காலத்தை வெல்லும்ஞானத்தைப்பெற்ற குருதேவர் ஏழையர் தம் வயிற்றுப் பசியை மறக்கவில்லை. பசி போக்கும் சமுதாயத் தொண்டே அவருக்குக் கடமையாயிற்று. ஏழைகளின் இன்னலைப் போக்குவதையே வழிபாடாகக் கருதினார் !

''எல்லையில்லாத பரம்பொருளின் பேரருள் கிடைக்கட்டும். ஏழையர் தம் இன்னல் தீரட்டும். சோற்றுக்கவலை விட்டு நீங்கி நாள்தோறும் வளம் பெறுக ! உண்மையுள்ளவர்களாய் வாழ்ந்து ஒருவரோடு ஒருவர் பெறும் கூட்டுறவில் மகிழ்ச்சியடைக. நாளுக்கு நாள் தூய்மையை வளர்க்க வெறுப்பும் உட்பூசலும் மறைக ! எளிய உயிரினத்தின் உணர்ச்சிகளையும் மதித்துப் போற்றுக ! பரமாத்மா வின் பேரொளிச் சிதறல் ஒரு சிறிதேனும் ஏழையர் மீதுபட்டு அவர்கள் நலமுடன் வாழ்க !'' என்பது அருவிபுரத்தில் மக்க ளெல்லாம் சேர்ந்தமைந்த ஆலயத்திலே அவர் நிகழ்த்திய வழிபாட்டுரை !

''தம்பசியினால் உறக்கம் கொள்ளாமல் துன்பப்படுகின்ற ஏழை மக்களாகிய இவர்களுக்கு உணவு படைத்துத் துன்பத்தைப் போக்கித் தூக்கம் கொள்ள வைப்பதே சிவகாருண்யம்'' என்கிறார் வள்ளலார். ஜீவகாருண்ய ஒழுக்கமில்லாது செய்யப்படுகிற ஞானம், யோகம், தவம், விரதம், ஜெயம், தியானம் முதலிய செய்கைகளெல்லாம் பிரயோஜனம் இல்லாத மாயாஜாலச் செய்கை களே என்றறிய வேண்டும்.

இராமலிங்க அடிகளார் நோய்களுள் மிகக் கொடிய நோய் பசி நோய் என்று உணர்ந்து, சாதி, குலம், சமயம் ஆகிய வேறுபாடு களைக் கருதாமல் ஏழைகளின் பசிக்கு உணவு அளிப்பதற்காக வடலூரில் 'கூழ்ச்சாலை' ஒன்றை 1867 இல் நிறுவினார். அன்று அவர் ஏற்றிய அடுப்பின் தீ இன்றும் எரிந்து வருகின்றது !

''பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்தில் பிராமணருக்கு மட்டுமே அன்னதான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன என்பதும், பெருந்தொகையில் ஏழை எளியவர் அனைவரும் உண்டு பசியாறும் ஏற்பாட்டை முதன் முதல் செய்தவர் அடிகளார்தாம் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது'' (டாக்டர் கே. கே. பிள்ளை, தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும் பக். 477)

உலகில் உயிர்களுக்கு உறும் எல்லாத் துன்பங்களையும் துயரங்களையும் போக்குவதே ஒருவர் மேற்கொள்ள வேண்டிய கடமையாக இருக்க வேண்டும் என்றும், அந்த நோன்பைத் தவறாமல் மேற்கொண்டு ஒழுகுவார் இறப்பையும் வெல்லுவர் என்றும் அவர் எடுத்துக்கூறி வந்தார். அதனால் உயிர்களிடத்துக் காட்டும் அன்பில் மிக உயர்நிலையை எட்டியிருந்தார். அதனால் சித்தி வளாகத்தில் கொடி கட்டினபோது மக்களுக்குச் சொன்ன ''பேருபதேசம்'' என்று சொல்லக் கூடிய உபதேசத்தில் ''சைவம், வைணவம் முதலிய சமயங்களிலும் வேதாந்தம் சித்தாந்தம் முதலிய மதங்களிலும் லட்சியம் வைக்காதீர்கள். அவ்வாறு பயிலுவோமானால் நமக்குக் காலமில்லை. இவைகளுக்கெல்லாம் சாட்சி நானே இருக்கின்றேன். இப்போது ஆண்டவர் என்னை ஏறாத நிலைமேல் ஏற்றியிருக்கின்றார். எல்லாவற்றையும் விட்டு விட்டதனால் வந்த லாபம் இது. ஆதலால், நீங்களும் விட்டு விட்டீர்களானால் என்னைப்போல் பெரிய லாபத்தைப் பெறுவீர்கள். நான் அப்படி அந்த சமயத்தில் வைத்திருந்த லட்சியமே என்னை இந்த நிலையில் தூக்கிவிட்டது என்றாலோ, அந்த லட்சியம் தூக்கிவிடவில்லை. என்னை இந்த இடத்திற்குத் தூக்கி விட்டது தயவு. தயவு என்னும் கருணைதான் என்னைத் தூக்கிவிட்டது. உண்மை சொல்ல வந்தனனே. என்னை, உண்மை சொல்லப் புகுந்தாலும் தெரிந்துகொள்வாரில்லை'' என்று கூறுகிறார்.

T 4741

*கோயில் வழிபாட்டில் வள்ளலார் பெரும் புரட்சி செய்தார். வடலூர் என்னுமிடத்தில் 1872 இல் சத்திய ஞானசபை ஒன்றை அமைத்தார். அதில் விளக்கொன்றை ஏற்றிவைத்து அதன் முன்பு ஒளி விதிகளின்படி இழைக்கப்பட்ட கண்ணாடியொன்றை நிறுத்தினார். கண்ணாடியை ஏழுவகைத் திரைகளால் மறைத்தார். கண்ணாடிக்கு அடுத்து உள்ளது கலப்பு நிறத்திரை அதையடுத்து ஒன்றுக்கு மூன் ஒன்றாக வெண்மை, பொன்மை, சிவப்பு, பச்சை, நீலம், கறுப்பு ஆகிய வண்ணங்கள் கொண்ட திரைகளைத் தொங்கவிட்டார். கறுப்புத் திரையில் தொடங்கி ஏழு திரைகளையும் ஒவ்வொன்றாக விலக்கினால் விளக்கின் 'ஜோதி' கண்ணுக்குத் தெரியும்.

உயிர்கள் ஏழு வகையான மறைப்புக்கு உட்பட்டுள்ளன என்றும் திரை மறைப்பெல்லாம் தீர்ந்துவிடுமாயின் அருட்பெருஞ் சோதியான இறைவன் காட்சியளிப்பான் என்ற தத்துவத்தை

ஞான சபையின் அமைப்புக் காட்டியது. ஆண்டுதோறும் தை மாதம் பூச நாளன்று இந்த ஏழு திரைகளையும் விலக்கி ஜோதி தரிசனம் காட்டப்பட்டு வருகிறது.

ஆலய வழிபாடு பற்றிய நாராயண குருவின் கருத்தும், மரபு வழிப்பட்ட கருத்திலிருந்து மாறுபட்டதே. படிப்படியாக வளர்ந்த மூன்று நிலைகளில் காணப்படுகின்றது. முதன் நிலையில் தம் இருப்பிடமாகத் தேர்ந்தெடுத்த அருவி புரத்தில் மக்கள் எல்லாரும் வேறுபாடின்றி வழிபடுவதற்கு ஒரு சிவன் கோயிலை அமைத்தார். பக்கத்தில் பாய்ந்த நீரோடையிற் கிடந்த கல் ஒன்றை எடுத்து அக் கோயிலிற் சிவலிங்கமாகப் பிரதிஷ்டை செய்தார்'

இரண்டாவது நிலையில் 1922 இல் குருக்கம்புழையில் கட்டிய கோயிலில் உண்மை, கருணை, அன்பு இரக்கம் என்னும் சொற்கள் மலையாளத்தில் எழுதப்பட்ட கல்லினைப் பிரதிஷ்டை செய்தார். உண்மையான சமயக் கோட்பாடும் நடைமுறையும் இச்சொற் கருத்துகளைப் பின் பற்றி வாழ்வதிலேயே அமைதுள்ளது என்பதை நிருபித்துக் காட்டுகிறது இந்நிகழ்ச்சி.

மூன்றாவது நிலையில், 1924 இல் களவங்காடு என்ற இடத்தில் கட்டிய கோயிலில் ஒரு பெரிய முகம் பார்க்கும் கண்ணாடியையே பதித்தார். கவிமணி கூறியதைப் போல 'இறைவன் உள்ளத்தில் உள்ளானடி; அதை நீ உணர வேண்டுமடி' என்பதை இது நினைவூட்டுகிறது.

காடன், மாடன், மாகாளி, மதுரை வீரன் என்று ஆயிரம் தெய்வங்களை வழிபடும் அறிவற்ற மக்களுக்கு ஒரே ஒரு தெய்வ மாகச் சிவனைக் காட்டினால் அவர்களுடைய மன நிலை உளப்பாங்கு உயரும் என்று நம்பின நாராயணகுரு, காலப்போக்கில் சமுக முன்னேற்றத்திற்குக் கோயில் கைகொடுக்காது என்பதை நன்கு உணர்ந்தார். அதனால் அவர் கல்விக் கூடங்களைப் பெருங் கோயில்கள் என அழைக்க ஆரம்பித்தார்.

"கோயில்கள் சாதி வேறுபாடின்றி எல்லா மக்களையும் ஒன்று சேர்க்கும் எனக் கருதினோம். ஆனால், அனுபவம் இந்த நம்பிக்கையைப் பொய்யாக்கிவிட்டது. கோயில்கள் சாதித் தடைகளை மிகுதிப்படுத்துகின்றன. இனி நாம் நம்மவர்களுக்குக் கல்வி தர முயலவேண்டும். அவர்களுடைய அறிவு பெருகட்டும். அவர்களை முன்னேற்ற அஃது ஒன்றுதான் வழி!" என்றார்.

•இவ்வளவு வெளிப்படையாக இராமலிங்க வள்ளலார் கோயில்களை மறுத்துக் கல்விச் சாலைகளை ஆதரித்ததற்குச் சான்றில்லை !

*சாதி சமய குலம் கோத்திர வேறுபாடுகளையும் சமயப் பூசல் களையும் கண்மூடிப் பழக்க வழக்கங்களையும் களைந்தெறிய முற்பட்டதற்காகச் சில சமயவாதிகள் (மடத்துத் தலைவர்கள்) அவரை வெறுத்துத் தூற்றிவந்தனர். தமிழகத்தில் முதல் முதலில் 'கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக' என்ற குரலை எழுப்பியவர் இவரே !

''வேதநெறி ஆகமத்தின் நெறி பவுராணங்கள்
விளம்பு நெறி இதிகாசம் விரித்த நெறி முழுதும்
ஓதுகின்ற சூது அனைத்தும் உளவு அனைத்தும் காட்டி
உள்ளதனை உள்ளபடி உணர உணர்த்தினையே !''

''ஊடல்செய் மதமும் சமயமும் இவற்றின்
உள்ள கற்பனைகளும் தவிர்ந்தேன்.''

''கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக
அருள் நயந்த நன்மார்க்கர் ஆள்க - தெருள் நயந்த
நல்லோர் நினைத்த நலம் பெறுக, நன்று நினைத்து
எல்லோரும் வாழ்க இசைந்து''

இராமலிங்க வள்ளலார் சந்தித்த வெறுப்பையும் எதிர்ப்பையும் நாராயண குருவும் சந்தித்தார். 1884ஆம் ஆண்டில் அருவிபுரத்தில் ஈழவர்களுக்காக ஒரு சிவன் கோயிலைக் கட்டினார் குருதேவர். அது கண்டு மனம்பொறாத மேல்சாதியைச் சார்ந்தவரான பார்ப்பனர் ஒருவர் - காயத்ரீ மந்திரத்தைச் சொல்கிறவர் - குரு தேவரைப் பார்த்துக் 'கீழ்ச்சாதியான ஈழவக் குலத்தைச் சேர்ந்த உங்களுக்குச் சிவ உருவை அமைத்து வழிபட என்ன உரிமை இருக்கிறது' என்று கேட்டார்.

நாராயண குரு ஆத்திரப்படாமல் அமைதியாய், "நான் இங்கே ஈழவச் சிவனைத்தான் அமைத்திருக்கின்றேன் (பிரதிஷ்டை); உங்களுடைய பார்ப்பனச் சிவனையன்று" என்று இனிமையாய் எடுத்துக் கூறினார்.

இவ்வாறு இராமலிங்க அடிகள், நாராயண குரு ஆகிய இரு பெரும் அருளாளர் வாழ்க்கையிலும் ஆன்மிக வளர்ச்சியிலும் உள்ள பலவித ஒற்றுமைக் கூறுகளினூடே நாராயண குருவின் கருத்துகள் இறைவனை நோக்கியிருப்பதைக் காட்டிலும் மக்களைப் பற்றியதாகச் சற்று வேகத்துடன் காணப்படுவதை உணருகிறோம்.

இலக்கிய வரலாற்றில் வில்லிபாரதம் பெறும் இடம்

ஆறு. காளிதாசன், எம். ஓ. எல், பி. எட்.
தமிழ்த் துணைப்பேராசிரியர்,
தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக்கல்லூரி,
தஞ்சை.

பாரத காலத்திற்குப் பிற்பட்ட நூல்களே தொன்மையான சங்கத்தமிழ் இலக்கியம் முதலிய நூல்கள் என்பர். ஆதலால் பாரதக்கதை தமிழ் இலக்கியங்களில் சங்கச் சான்றோர்களால் அகப்பாடல்களிலும், புறப்பாடல்களிலும் சுட்டப்பட்டுள்ளன. நடந்த பாரதப் போரிடைத் தென்னாட்டு மூவேந்தர்கட்கும், தொடர்புண்டு என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட செய்தியாதலின் தமிழ்ப்புலவர்கள் தமிழகத்தில் நிகழ்ந்த போர்களைப் போன்று பாரதப் போரையும் உவமவகையாலும், பிறமுறையாலும் சங்கப் பாடல்களில் அமைத்தனர். புறநானூற்றில் முதற்பாட்டே சேர மன்னனுக்குப் பாரதப் போரோடு இருந்த தொடர்பைத் தெளிவாகக் காட்டுகிறது. பாரதக்கதை தமிழ் மக்களின் நாட்டு வழக்கோடு கலந்து விட்டமையால் தான் சங்க அண்மைக் காலத்தை அடுத்துப் பெருந்தேவனார்க்குப் பாரதம் பாடும் எண்ணம் ஏற்பட்டது.

சங்க இலக்கியங்களின் பாரதம் :

புறநானூறு, பதிற்றுப்பத்து, சிறுபாணாற்றுப்படை பெரும்பாணாற்றுப்படை கலித்தொகை ஆகிய சங்க நூல்களுல் பாரதம் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

புறநானூறு :

புறநானூற்றில் இரண்டாவது பாடலைப் பாடிய புலவர் முரஞ்சியூர் முடி நாகராயர் பெருஞ்சோற்றியஞ் சேரலாதனைப் பாராட்டுங்கால்,

"அலங்குளைய புரவி ஐவரொடு சினைஇ
நிலந்திலைக் கொண்ட பொலம்பூர் தும்பை
ஈரைம் பதின்மரும் பொதுகளத் தொழியப
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்"

எனப் பாரதப் போர் நிகழ்ச்சியை இணைத்துக் காட்டுகிறார்.

பதிற்றுப்பத்து :

பதிற்றுப்பத்தில் குமட்டூர்க் கண்ணனார் என்னும் புலவர் இமயவரம்பனின் கொடைச் சிறப்பையும், ஆற்றலையும் பாராட்டும் போது வியாச பாரதத்தில் குறிப்பிடப்படும் அக்குரலோடு அவனை ஒப்பிட்டு,

> "போர்த்தலை மிகுந்த ஈரைம் பதின்மரொடு
> துப்புத்துறை போகிய துணிவுடை ஆண்மை
> அக்குரல் அனைய கைவண்மையையே"

எனக் கூறுகின்றார்.

சிறுபாணாற்றுப் படை :

நல்லியக் கோடனைப் பாராட்டும் நல்லூர் நத்தத்தனார் பாடிய இந்நூலில் வீமனைப் பற்றிய குறிப்பு வருகிறது. நல்லியக் கோடன் விருந்தளிக்கும் சிறப்பினைப் பாடுங்கால் மடைநூல் நெறியிற்றப்படாத பல்வேறு சுவையான உணவுகளைப் பாவலர்க்கு நல்கினன் என்றும், அம்மடை நூல் செய்தவன் அர்ச்சுனற்கு முற்பிறந்த வீமன் என்றும் ஆசிரியர் குறிக்கின்றார். இதனால் சங்ககாலத்தில் வீமனால் ஆக்கப்பட்ட சமையல் நூல் வழக்கில் இருந்ததை அறியலாம்.

> "காஎரி யூட்டிய சுவர்களைத் துணிப்
> பூவிரி கச்சைப் புகழோன் தன்முன்
> பனிவரை மார்பன் பயந்த நுண்பொருட்
> பனுவலின் வழாஅப் பல்வேறு அடிசில்"

என்பது அச்செய்தி கூறும் சிறுபாணாற்றுப்படைப் பகுதியாகும்.

சிறுபாணாற்றுப் படையில் அர்ச்சுனன் காண்டபக்காட்டினை அழித்த செய்தி கூறப்படுகிறது. திராவிட மன்னன் அரண்மனையில் சமையல் கலையில் வல்லவனாய் வீமன் பணி செய்ததைப் பாரதம் உணர்த்துகிறது.

பெரும் பாணாற்றுப்படை :

பெரும் பாணாற்றுப் படையில் தொண்டைமான் இளந்திரையனின் வீரத்தை குறிக்கும் ஆசிரியர் பாண்டவர்கள் நூற்றுவர்கள் வெற்றி கொண்ட தன்மையைப் போன்றது இளந்திரையனின் வீரம் என்கின்றார் அப்பகுதி.

> "ஈரைம் பதின்மரும் பொருது களத்தவியப்
> பேரமர்க் கடந்து கொடுஞ்சி நெடுந்தேர்

ஆராச் செருவின் ஐவர் போல
ஒன்னாத் தெவ்வர் உடன்று மேல்வந்த
ஒன்னாத் தெவ்வர் கூல்விடத்து ஆர்த்துக் கச்சியோனே''
என்பதாகும்.

கலித்தொகை :

கலித்தொகையிலே பாரதச் செய்திகள் அதிகமாக இடம் பெற்றுள்ளன. பாலையின் வெம்மையால் மூங்கிற்காடுகள் தம்முள் உராய்ந்து தீப்பற்றிக் கொள்ள அக்காட்டினுள் அகப்பட்ட களிறு தன் இனத்தைக் காப்பாற்றுகிறது. அச்செயல் தீயினால் அழியும் அரக்கு வீட்டினின்றும் தன் உடன் பிறந்தவர்ககளை வீமன் காப்பாற்றுவது போன்றது என்கிறார் பாடலைப் பாடிய பெருங்கடுங்கோ அப்பாடல்,

''வயக்குறு மண்டிலம் வடமொழிப்பெயர் பெற்று
முகத்தவன் மக்களுள் முதியவன் புணர்ப்பினால்
ஐவரென்றுல கேத்தும் அரசர்கள் அகத்தராக
கைபுனை அரக்கில்லைக் கதழெரி சூழ்ந்தாங்குக
களிதிகழ் கடா அத்த கடுங்களிற கத்தாங்குக''
என்பதாகும்.

வீமன், துரியோதனனின் தொடையில் அடித்து தன் வஞ்சினத்தை முடித்தது, பாஞ்சாலியின் கூந்தலைத் தொட்டி ழுத்து வந்த துச்சாதனனை வீமன் கொன்று தன் கையின் மேல் தாங்கிக் கொன்று போர்க்களத்தில் ஆடியது அசுவத்தாமன் பாசறையில் புகுந்து திட்டத்துய்மனைக் கொன்று பழிதீர்த்தது, ஏறுகளின் செயலால் துமளிப்பட்டதொழு பாரதப் போர்க்களம் போன்று காட்சியளித்தது ஆகிய பல செய்திகளைக் கலித்தொகை உணர்த்துகிறது.

சங்கப் புலவர்கள் பாரதக் கதையைச் செறிவாகச் சொல்லி இருக்கும் முறையைக் காணும்போது சங்க காலத்தில் பாரதத்திற் கிருந்த செல்வாக்கினை நாம் உணரலாம்.

காப்பியங்களில் பாரதம் :

தமிழ் நிலக் காப்பியமான சிலப்பதிகாரம் மணிமேகலை சீவகசிந்தாமணி பெருங்கதை போன்றவற்றிலும் பாரதம் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

சிலம்பு :

பாண்டவருக்காகக் காட்டினை கண்ணன் தூது சென்றது, அருச்சுனன் காண்டவக் காட்டினை அழித்தது, பாரதப்போர் 18 நாள் நடந்தது, பாரதப் படைக்கு சேரன் பெருஞ்சோறு அளித்தது, கண்ணன் தன் சக்கரப் படையால் சூரியனை மறைத்தது போன்ற பாரதச் செய்திகள் சிலம்பிலே இடம் பெற்றுள்ளன.

மணிமேகலை :

விராட நகரில் அருச்சுனன் பேடியாகக் கரந்து வாழ்ந்தது, திரௌபதி சோறுவற்றாத பாத்திரத்தால் உடன் இருப்போர் பசியைப் போக்கியது, போன்ற செய்திகள் மணிமேகலையில் காணப்படுகின்றன.

சீவக சிந்தாமணி :

அபிமன்யு துரியோதனனுடன் தனஞ்செயன் பெயராட்சி பாண்டவர்களைத் துரியன் பழித்தது, போரிடைத் துரியன் அருச்சுனனைக் கண்டு மகிழ்ந்தது. வீமனின் அடிசிற் கலை வல்லமை, துரியோதனன் அரவக்கொடி கொண்டது போன்ற செய்திகள் இதில் இடம் பெற்றுள்ளன.

சைவத் திருமுறைகள் :

எல்லாத் திருமுறைகளிலும் சிவபெருமான் வேடனாக வந்து அருச்சுனனுக்குப் பாசுபதம் வழங்கிய செய்தி குறிப்பிடப் பட்டுள்ளது.

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் :

பாரதப் போரில் கண்ணன் தூது சென்றதும் அருச்சுனனுக்குத் தேர்ப்பாகனாக அமைந்ததும் ஆகிய செய்திகள் நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தில் மிகுதியும் இடம் பெற்றுள்ளன. பகலவன் ஒளிகெட ஆழியால் மறைத்தது. காண்டவ வனத்தை கனல் எரி மூட்டியது, நூற்றுவர் தம் பெண்டிர் நூல் இழந்தது போன்ற செய்திகளே இந்நூலில் காணலாம். பன்னிரு ஆழ்வார்களின் அருளிச் செயல்களாகிய இந்நூலில் பாரதக்கதை புதிய வீறு பெற்றுள்ள தன்மையைக் காண முடிகிறது. கண்ணன் இப்பாசுரங் களில் அவதாரமாகத் தலைமைபெறுகிறான். அது முதல் பாரதம் கண்ணபிரான் பெருமை பாடும் காப்பியமாயிற்று. 'மன்று மா மாதவன் சரிதம்' இடையிடை வருகின்ற பற்றினால் பாரதம் பாடியதாக வில்லிபுத்துராரே குறிப்பிடுகின்றார். ஆழ்வார் பாசுரங்

களின் மீது கொண்ட பற்றின் விளைவே வில்லிபாரதம் எனக் கூறலாம். இதனால் தான் பருவந்தோறும் சருக்கந்தோறும் கண்ணன் வணக்கம் பாடுகின்றார் வில்லிபுத்தூரார்.

வில்லி புத்தூரார் பாரதம் :

வில்லி பாரதம் தமிழக மக்களிடையே மிகவும் செல்வாக்குப் பெற்ற நூலாகும். வில்லிபுத்தூரார் பாரதம் இயற்றியதற்குச் செவி வழி வரும் ஒரு காரணம் உண்டு. வில்லிபுத்தூரார் தம் தம்பிக்குப் பாகம் கொடுக்காமல் தாமே அதனை எடுத்துக் கொண்டதாயும் தம்பி அரசனிடம் முறையிட அரசன் பெரும் புலமையுடைய வில்லி புத்தூராரைக் கண்டிக்க முடியாமல் இருவரையும் பார்த்து மகாபாரதத்தைப் பாடி வந்தால் வழக்கைத் தீர்த்துவைக்கிறேன் என்று கூற அதன்படி வில்லிபுத்தூரார் பாரதம் பாடினார் என்பதும் தாய பாகச் சண்டையினால் பாரதப்போர் ஏற்பட்டதையும் எண்ணிய வில்லியார் தம் தம்பிக்கே சொத்து முழுவதையும் கொடுத்துவிட்டார் என்பதுமே அச்செவி வழி வரும் காரணம் எனப் பூர்ணலிங்கம் பிள்ளை அவர்களும் மு. அருணாசலம் அவர்களும் குறிப்பர்.

ஆனால் இச் செய்திக்கு வரந்தருவார் சிறப்புப் பாயிரத்திலோ வில்லி பாரதத்திலோ குறிப்பு ஏதுமில்லை வடமொழியில் உள்ள பாலபாரதத்தை அடியொற்றியது என்பர் ச.கு. கணபதி ஐயர்.

வில்லிபுத்தூரார் தம்முடைய சொந்தக் கற்பனைகளைப் பல இடங்களில் புகுத்தியிருப்பினும் இவர் நூலுக்கு முதல் நூல் அகத்தியப்பட்டர் எழுதியபாலபாரதம்தான் என்பது அவர் கருத்து. வியாச பாரதத்தையும் பால பாரதத்தையும் அடியொற்றியது வில்லிபாரதம் என்பது பூர்ணலிங்கம் பிள்ளை கருத்தாகும். வில்லி பாரதத்திற்கு உரை கண்ட வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் வியாச பாரதத்தை ஒட்டி எழுந்தது வில்லிபாரதம் என்பர்.

இவ்வாறு ஆய்வாளர் கருத்து வேறுபட்டாலும்,

“மண்ணில் ஆரண நிகரென வியாதனார் பகுத்த
எண்ணிலாநெடுங் காதையை யானறிந் தியம்மல்”

(தற்சிறப்பு பாயிரம்-6)

என வில்லிபுத்தூரார் தம் நூலில் குறித்திருத்தலால் வியாச பாரதமே வில்லி பாரதத்துக்கு முதல் நூல் என அறியலாம். எனினும் பிற பாரத நூல்களும் இவருக்குத் துணையாக இருந்து இருக்கலாம் எனக்கருதலாம்.

இப்பாரதம் பொது மக்களிடத்தும் பரவி இருந்தது. சங்க காலந்தொட்டு எல்லாக் காலத்தும் எல்லாத் தமிழிலக்கியத்தும் பாரதக் கதைக் கூறு காணுவதை நோக்கும்போது தன் நூலாக வளர்ந்த உரிமைத் தன்மை பாரதத்திற்குத் தமிழிலக்கியத்துள் உண்டு என அறியலாம். பாரதம் பாடிய பெருந்தேவனார் என்ற தொடர் சங்க காலத்திலேயே தனி நூற் படைப்புப் பெற்று விட்டது என்பதற்குச் சான்று ஆகும். இவரை வழி காட்டியாகக் கொண்ட பாரதக் கதைக்குத் தனி நூற் படைப்புக்கள் எழுந்தன. புலவர் சிலர் பாரதக் கதையில் மக்களைக் கவர்ந்த சில பகுதி களுக்குக் கிளை பாரத நூல்கள் படைத்தனர் தேசியகவி பாரதியார் எழுதிய பாஞ்சாலி சபதமே இதற்குக் காட்டாகும்

பாரதத்திற்குத் தனி இலக்கிய படைப்புக்களும் கிளை நூல் படைப்புக்களும் நாட்டுப்புற படைப்புக்களும் உண்டு.

தனி இலக்கியப் படைப்புக்கள்:

1. பாரதம் பாடிய பெருந்தேவனார் பாரதம்
2. பெருந்தேவனார் பாடிய பாரத வெண்பா
3. பெருந்தேவனார் பாடிய மகாவித்தம்
4. அருணிலை விசாக பாரதம்
5. வில்லிபுத்தூரார் பாரதம்
6. ஆசி பருவத்தாதி பாரதம்
7. அரங்க நாதக் கவிராயர் பாரதம்
8. நல்லாப் பிள்ளை பாரதம்
9. பாரத சற வெண்பா.

மேற்கொண்ட நூல்கள் கதை கோப்பு உடையனவாய் பாரத நூல்கள் என்ற பெயருக்கு உரியனவாகும்.

கிளைப் பாரத நூல்கள்:

1. பாஞ்சாலி சபதம்
2. மாரி வாயில்
3. நள வெண்பா
4. நைடதம்

இவை பாரதக் கதை பாத்திரங்களின் தனி நிகழ்ச்சி களையும் பாரதக் கிளைக் கதைகளின் பொருளாகக் கொண்டு எழுந்தநூல்களாகும்.

வில்லி பாரதத்தை அடியொற்றியே பாடிய பாரதியார் தேசிய விடுதலையை நோக்கமாகக் கொண்டு பாஞ்சாலி சபதத்தை இயற்றியிருக்கிறார் என அறியலாம்.

அருச்சுனன் தலப்பயணம்செய்யும்போது பாண்டியன்மகளைத் திருமணம் செய்து கொண்டதாக வில்லி பாரதம் கூறும். ஆனால் பாண்டியன் மகள் மமரியைத் தூதுவிட்டதாக வில்லி பாரதத்தில் இல்லை.

நாட்டுப்புற பாரதங்கள் :

1. அல்லி அரசாணி மாலை
2. பவளக் கொடி மாலை
3. புளந்திரக் களவு மாலை
4. பொன்னுருவு மசக்கை
5. ஏணி யேற்றம்
6. புலந்திரன் தூது.

இவ்வகை நூல்கள் ஊர்மக்களுக்குக் கென்று வழக்குச் சொற்கள் விளங்க இசையோடு கூடிய யாப்பினால் படைக்கப் பட்டவை. பாரத மனிதர்களின் பெயர்களைத் தாங்கி இக்கதைகள் கூறப்படுகின்றன. பாரதம் ஊர்தோறும் படிக்கப் பெற்ற கதையென்று கல்வெட்டுக் கூறுகிறது. இடைக்காலப் புலவர்கள் இதனை அறிந்து நாட்டுப்புற இலக்கியங்களே மிகுதியாகப் படைத்தனர். இவ்விலக்கியங்கள் பாரதத்திற்கே மிகுதியாகத் தோன்றின.

அழுந்தூர் ஆர்ப்பு

க. வெள்ளைவாரணனார்

'அழுந்தூரில் எழுந்த பேராரவாரம்' என்பது இத்தொடரின் பொருளாகும். கடைச்சங்கப்புலவராகிய பரணர், அழுந்தூரில் தோன்றிய பேராரவாரத்தைப் பரத்தையிற்பிரிந்த தலைமகனது புறத்தொழுக்கம் பற்றி ஊராரிடையே நிலவிய அலர்மொழிக்கு உவமையாக ஒருபாடலிற் குறித்துள்ளார். அப்பாடல்,

"பிணர் மோட்டு நந்தின் பேழ்வாயேற்றை
கதிர்மூக்காரல் களவனாக
நெடுநீர்ப்பொய்கைத் துணையொடு புணரும்
மலிநீ ரகல் வயல் யாண ரூர
போதார் கூந்தல் நீவெய் யோளொடு
தாதார் காஞ்சித் தண்பொழி லகல்யா
றோடினை யென்ப நெருநை, அலரே
காய்சின மொய்ம்பிற் பெரும் பெயர்க் கரிகால்
ஆர்கலி நறவின் வெண்ணி வாயிற்
சீர்கெழு மன்னர் மறலிய ஞாட்பின்
இமிழிசை முரசம் பொருகளத் தொழியப்
பதினொரு வேளிரொடு வேந்தர் சாய
மொய்வலி யறுத்த ஞான்றைத்
தொய்யா அழுந்தூர் ஆர்ப்பினும் பெரிதே. (அகம்-246)

எனவரும் அகநானூற்றுப் பாடலாகும். "சொரசொரப்புடைய வயிற்றினையும் பிளந்த வாயினையும் உடைய ஆண்சங்கு கூரிய மூக்கினையுடைய ஆரல்மீன் சான்று கூறுவோனாக ஆழமுடைய பொய்கை நீரில் பெண்சங்கினை மணம் புணரும் நிறைந்த நீரையுடைய அகன்ற வயலாற் சூழப்பட்ட புதுவருவாயினை யுடைய ஊர்க்குத் தலைவனே, மலர் நிறைந்த கூந்தலையுடைய ளாகிய நின்னால் விரும்பப் பெற்ற பரத்தையுடன், பூந்தாது சொரியும் காஞ்சி மரங்கள் அடர்ந்த குளிர்ந்த சோலையின் அருகே யோடும் அகன்ற யாற்றிலே நேற்றுப் புனலாடினையென ஊர்மக்கள் எல்லோரும் நம்முட் பேசிக் கொள்கின்றனர். நினது புறத்தொழுக்கம் பற்றிய பழிச் சொல்லானது, பகை வரையழிக்கும் வெகுளியையும் செறிந்ததோள் வன்மையையும் பெரும்புகழையும் உடைய கரிகால் வளவன் ஆரவாரம் மிக்க தேறல்பருகிய வீரர்கள் குழுமிய வெண்ணிப் பறந்தலையாகிய போர்க்களத்திலே வெற்றிச் சிறப்புடைய வேந்தர்கள் மாறுபட்டு எதிர்த்துப் பொரும் போரின்

கண்ணோ ஒலிக்கும் இசையினையுடைய வீரமுரசம் விடப்பட்டு ஒழிய வேளிர் பதினொருவருடன் சேரன் பாண்டியன் என்னும் வேந்தர் இருவரும் தோற்று அழிய அவர்தம் செறிந்ததோள் வன்மையை அழித்துப் போக்கிய நாளிலே தோலாத அழுந்தூர் மக்கள் நிகழ்த்திய வெற்றிவிழா ஆரவாரத்தினும் மிக்க ஆரவாரத்தினையுடையதாயிற்று (எனவே இந்நிலையில் நின் மனைவியின் ஊடலைத் தணித்தல் என்னால் இயலாது)" எனத் தோழி தலைமகனுக்கு வாயில் மறுத்ததாக அமைந்தது, இவ்வகப் பாடலாகும். இப்பாடலில் தலைமகனது பரத்தமையாகிய புறத்தொழுக்கம் பற்றி ஊராரிடையே பரவிய பழிச்சொல் ஆரவாரத்திற்கு, வெண்ணிப் பறந்தலையில் நிகழ்ந்த போரில் கரிகால்வளவனது வெற்றி குறித்து அழுந்தூர் மக்களிடையே தோன்றிய புகழ்ச்சொல் ஆரவாரத் திணைப்பரணர் உவமையாக எடுத்தாண்டுள்ளமைகாணலாம். சோழன்கரிகாலன் வெண்ணிப் போரில் விளைத்த வெற்றி குறித்த ஆரவாரம் சோழநாட்டுப் பேரூர்களாகிய உறையூர், காவிரிப்பூம்பட்டினம் முதலிய தலைநகரங்களில் சிறப்பாக நிகழ்ந்திருத்தல் இயல்பே. இவ்வூர் களின் ஆரவாரத்தினைத் தனித்தெடுத்துக் கூறாமல், அழுந்தூரில் நிகழ்ந்த ஆரவாரத்தினை மட்டும் பெரிதாக இப்பாடலிற் பரணர் எடுத்துக் கூறியுள்ளார். இவ்வாறு அழுந்தூர் ஆர்ப்பினைச் சிறப்பாக எடுத்துக் கூறுதற்குரிய காரணம் யாது என்பது இங்கு ஆழ்ந்து சிந்தித்தற்குரிய தொன்றாம்.

கடைச்சங்கப் புலவர்களில் பரணர், மாமூலர் என்போர் தம் காலத்திலும் தமக்கு முன்னரும் நிகழ்ந்த அரிய வரலாற்றுச் செய்தி களைத் தாம் பாடும் பாடல்களில் உவமையாக எடுத்தாளும் இயல்பினர். இவர்கள் பாடிய பாடல்கள் தமிழக வரலாற்று நிகழ்ச்சிகள் பலவற்றை அறிவுறுத்தும் இலக்கியச் சான்றுகளாகத் திகழ்கின்றன. அம்முறையில் அகநானூறு 246 - ஆம் எண்ணில் அமைந்த பரணர் பாடலும் அரிய வரலாற்று நிகழ்ச்சிக் குறிப்பொன்றினைப் புலப்படுத்துகின்றது.

மேலே குறிக்கப்பட்ட அழுந்தூர் என்னும் ஊர் சோழ மண்டலத்தின் அகநாடுகளுள் ஒன்றாகிய அழுந்தூர் நாட்டின் தலைநகராகும். இச்செய்தி, "ஜெயங்கொண்ட சோழவளநாட்டுத் திருவழுந்தூர்நாட்டுத் திருவழுந்தூர்" என இவ்வூர்ச் சிவன் கோயிலில் வரையப் பெற்றுள்ள கல்வெட்டுத் தொடரால் இனிது புலனாகும். அழுந்தூர் என்னும் இவ்வூர் மயிலாடுதுறையிலிருந்து தஞ்சை செல்லும் புகைவண்டி வழியில் உள்ள தேரழுந்தூர் புகை வண்டி நிலையத்திலிருந்து தெற்கே இரண்டு கல்தொலைவில்

உள்ளது. இவ்வூரின் கீழ்த்திசையில் திருஞான சம்பந்தராற் பாடப்பெற்ற 'அழுந்தூர் மாமடம், என்னும் சிவன் கோயிலும் மேற்றிசையில் திருமங்கை யாழ்வாராற்பாடப் பெற்ற திருமால் கோயிலும் ஒன்றையொன்று நேரிடையில் எதிரெதிரே யமைந் துள்ளன. இவ்வூர் அகநானூறு திருஞானசம்பந்தர், தேவாரம், பெரியதிருமொழியாகிய செந்தமிழ்ப் பனுவல்களில் அழுந்தை எனவும் மருவி வழங்கப்பெற்றுள்ளது.

அகத்திய முனிவர் இவ்வூரில் சிவபூசை செய்து கொண் டிருந்ததனை அறியாமல் ஊர்த்து வரதன் என்னும் அரசன் ஆகாயத்திற் செலுத்திய தேர் பூமியில் விழுந்து அழுந்தியதனால் அழுந்தூர் எனப் பெயர் பெற்றது எனவும், உபரிசரவசு என்னும் மன்னன் ஒரு வழக்கில் நடுநிலை தவறியதால் ஆகாயத்திற் செல்லும் அவனது தேர் பூமியில் விழுந்து அழுந்தினமையால் இவ்வூர் அழுந்தூர் எனப் பெயரெய்தியது என வைணவரும் இவ்வூர்க்குரிய பெயர்க் காரணத்தினைப் புனைந்துரைப்பர். தேர் அழுந்தியது எனக் கூறப்படும் கதையையொட்டி இவ்வூர் பிற் காலத்தில் தேரழுந்தூர் என வழங்கப் பெறுவதாயிற்று. எனினும் அழுந்தூர் என்பதே இதன் பழைய பெயர். தெய்வத் தலங்களுக் குரிய திரு என்னும் அடைபுணர்த்துத் திருவழுந்தூர் என வழங்குதலே பண்டையோர் மரபாகும். கவிச்சக்கரவர்த்தி கம்பர் பிறந்த ஊர் இதுவே. இச்செய்தி

'கம்பன் பிறந்தவூர் காவேரி தங்கமூர்
கும்பமுனிசாபங் குலைந்தவூர் — செம்பதுமத்
தாதகத்து நான்முகனுந் தாரையுந்தேடிக்காணா
ஓதகத்தார் வாழுமழுந்தூர்'

எனவரும் பழைய வெண்பாவினாலும் இவ்வூரிற் கம்பர் பிறந்த மனை கம்பர் மேடு என வழங்கப் பெற்று வருதலானும் நன்கு துணியப்படும்.

"மன்னர் பாங்கிற் பின்னோர் ஆகுப" (தொல்காப்பியம் அகத்திணையியல் சூ. 30) எனவரும் சூத்திரத்திற்கு அரசரைச் சார்ந்து வாழும் பக்கத்தாராகி நிற்றல் காரணமாகப் பின்னோர் எனப்பட்ட வேளாளர் வரையறையின்றிவேந்தன் ஏவியதிறம் எல்லாவற்றினும் பிரிதற்கு ஆக்கமுடையராகுக" எனஉரைவரைந்த நச்சினார்க்கினியர், 'மன்னர் பின்னோர் எனப் பன்மை கூறினமை யின் முடியுடையோரும் முடியில்லா தோரும் என மன்னர் இரு வகைப்படுவர் எனவும் அவ்வாறே பின்னோர் எனப்பட்ட வேளாண் மாந்தரும் உழுவித்துண்போர் உழுதுண்போர் என

இருவகைப்படுவர் எனவும், "அவருள் உழுவித்துண்போர் மண்டிலமாக்களும் தண்டத்தலைவருமாய்ச் சோழ நாட்டுப் பிடவூரும் அழுந்தூரும் நாங்கூரும் நாவூரும் ஆலஞ்சேரியும் பெருஞ்சிக்கலும் வல்லமும் கிழாரும் முதலிய பதியிற்றோன்றி வேள் எனவும் அரசெனவும் உரிமையெய்தினோரும் பாண்டி நாட்டுக் காவிதிப் பட்டம் எய்தினோரும் குறுமுடிக்குடிப் பிறந்தோர் முதலியோருமாய் முடியுடை வேந்தர்க்கு மகட் கொடைக்குரிய வேளாளராகுப. 'இருங்கோ வேண்மான் அருங்கடிப்பிடவூர்' (புறம்-395) எனவும் "ஆலஞ்சேரிமயிந்தன் ...... ஊருண்கேணி நீரோரொப்பான்' (பழம்பாடல்) எனவும் சான்றோர் செய்யுட் செய்தார்" எனவும் எடுத்துக்காட்டுத் தந்து விளக்கியுள்ளார். 'உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி அழுந்தூர் வேளிடை, மகட்கோடலும் அவன் மகனாகியகரிகாற் பெருவளத்தான் நாங்கூர் வேளிடை மகட்கோடலும் கூறுவர்" என்ற வரலாற்றுச் செய்தியையும் இத்தொல்காப்பியச் சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர் எடுத்துக் காட்டியிருப்பது இங்குக் கூர்ந்துணர்தற்குரியதாகும்.

நச்சினார்க்கினியர் உரையிற் காணப்படும் வரலாற்றுக் குறிப்பு, கரிகால் வளவன் வெண்ணிப் போரில் நிகழ்த்திய வெற்றிச் செயல்குறித்து அழுந்தூர் மக்கள் சிறப்பாக ஆரவாரித்து மகிழ்தற்குரிய காரணத்தை இனிது புலப்படுத்தும் முறையில் அமைந்துள்ளமை காணலாம். சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியின் மைந்தன் கரிகாற்பெருவளத்தான் என்பதும், கரிகால்வளவன் தன் இளம்பருவத்திலேயே வெண்ணிப் போர்க் களத்தில் சேரபாண்டியராகிய இருபெரு வேந்தரையும் வேளிரையும் பொருது வென்றான் என்பதும்,

"உருவப் பஃறேர் இளையோன் சிறுவன்
... ...
ஆளிநன்மான் அணங்குடைக்குருளை
மீளிமொய்ம்பின் மிகுவலி செருக்கி
முலைக்கோள் விடா அமாத்திரை ஞெரேரெனத்
தலைக்கோள் வேட்டங்களிறட்டா அங்கு
இரும்பனம் போந்தைத் தோடுங் கருஞ்சினை
அரவாய் வேம்பின் அங்குழைத் தெரியலும்
ஓங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த
இருபெரு வேந்தரும் ஒருகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாட்
கண்ணார் கண்ணிக் கரிகால்வளவன்"

(பத்துப் - பொருந. 130 - 148)

எனவரும் பொருநராற்றுப்படையில் விரித்துரைக்கப் பெற்றன.

'அழகிய தேரினையுடைய இளஞ்சேட் சென்னியின் மைந்தன் கூற்றுவனது வலியினும் மிக்க வன்மையாலே உள்ளக் கிளர்ச்சியுடையனாய், ஆளியென்னும் சிங்கத்தின் இளையகுட்டி தன் தாய்ப்பாலையுண்ணுதலைக் கைவிடாத இளம் பருவத்திலேயே கடுகவிரைந்து தனக்குரிய இரையினைக் கொள்ளுதற்குக் காரணமான முதல் வேட்டையிலேயே ஆண்யானையை அடுத்துக் கொன்றாற் போன்று பனம் பூமாலையினையும் வேப்பமலர் மாலையினையும் தம் முடிக்கணிந்த சேரன் பாண்டியன் என்னும் இருபெருவேந்தரும் ஒரு களத்திலே இறந்துபட வெண்ணியென்னும் ஊரிடத்தேபொருது வென்ற அச்சந்தரும் வலிய முயற்சியினையும் கண்ணுக்கு அழகினையுடையதாய் விளங்கும் ஆத்திமாலையையும் உடைய கரிகாற் பெருவளத்தான்' என்பது மேற்காட்டிய பொருநராற்றுப்படைத் தொடரின் பொருளாகும்.

உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியென்னும் சோழ மன்னன் அழுந்தூர்வேள் மகளை மணந்தாள் என்பது நச்சினார்க்கினியருரையிற் காணப்படும் வரலாற்றுக் குறிப்பாற் புலனாதலின் இளஞ்சேட் சென்னியின் பட்டத்தரசி அழுந்தூர்வேள் மகள் என்பதும் அவள் வயிற்றிற் பிறந்தவனே கரிகால் வளவன் என்பதும் உய்த்துணரப்படும். அழுந்தூர்வேள் மகள் வயிற்றிற் பிறந்த அரசிளங்குமரனாகிய கரிகால் வளவன் தன் இளம் பருவத்திலேயே சேரனையும் பாண்டியனையும் வெண்ணிப்போர்க் களத்திலே பொருது பெற்ற வெற்றியானது பொதுவாகச் சோழ நாட்டு மக்கள் அனைவராலும் ஆரவாரத்துடன் கொண்டாடப் பெற்றதுடன் அழுந்தூர் மக்களால் சிறப்பாகப் பேராரவாரத்துடன் கொண்டாடப் பெற்றது என்னும் இவ்வரலாற்று நிகழ்ச்சியை அறிவுறுத்தும் முறையிற் பரணராற்பாடப் பெற்று அகநானூற்றிலுள்ள 246-ஆம் பாடலாகும் என்பது இதுகாறும் எடுத்துக் காட்டிய சான்றுகளால் இனிது புலனாதல்காணலாம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

தமிழ்த்துறை

திருக்குறள் ஆய்வகம்

அன்புடையீர்,

திருக்குறளுக்கு முன்னர்த் தோன்றிய பழைய உரைகளே யன்றிப் பின்னர் எழுந்த பல புதிய உரைகளையும் குறள் குறித்தெழுதப் பெற்ற உரைநடை நூல்கள், கட்டுரைகள், மலர்கள், இதழ்கள், ஆங்கில மொழிபெயர்ப்புகள், இதுவரை வெளிவாராது குறித்து வைக்கப்பெற்ற புதுக்குறிப்புகள் ஆகியவற்றையும் கண்டு அவற்றிலுள்ள வேறுபட்ட உரைகளைத் தொகுத்தும் ஏற்றுக் கொள்ளத் தக்க உரை எது என விளக்கி முடிவு சுட்டியும் 'திருக்குறள் உரை வேற்றுமை' என்னும் பெயரில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்றற்கும் முன்னைய நிலையிலும் விரிவாக எழுதி வெளியிட அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை திட்டமிட்டுள்ளது.

நீங்கள் எழுதிய உரைநூலிலோ, உரைநடை நூலிலோ, கட்டுரையிலோ புதிய உரை காணப்படுமாயின் அதுபற்றிய விவரத்தைக் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுங்கள். எழுத்து வடிவம் பெறாது புதிய உரை கண்டிருந்தாலும் அதனைத் தங்கள் பெயரோடு தெரிவிப்பின் ''உரை வேற்றுமையில்'' நன்றியுடன் சேர்த்துக் கொள்ளப் பெறும். புத்தகமோ, கட்டுரையோ இப்பொழுது கிடைத்தல் அரிதெனில் புதிய குறட்செய்தியை மட்டும் எழுதியனுப்பின் உரை வேற்றுமை நூலில் சேர்க்க வாய்ப்பாக இருக்கும்.

திருக்குறள் பயிற்சி பெற்ற அன்பர்கள் தாம் நுண்ணிதிற் கண்ட புதிய உரையைத்தரின் திருக்குறள் உரைவேற்றுமை வாயிலாகத் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு அறிவித்துக் குறட் கல்வியை வளர்க்க உதவும். தங்கள் கருத்தினைப் பின்வரும் முகவரிக்கு அறிவியுங்கள்.

தொடர்பிற்கு :

டாக்டர் இரா. சாரங்கபாணி,
சிறப்பு நிலைப் பேராசிரியர்,
திருக்குறள் இருக்கை, தமிழ்த் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலை நகர் 608 002.

சிதறிய சிலம்பு

என். சண்முகம்
7, மேற்கு ராஜா வீதி
ஆலந்தூர் - சென்னை - 600016.

கால் சிலம்பின் கதை. இளங்கோ அடிகள் இயற்றியதும் - தமிழ் இலக்கிய மணிகளுள் ஒன்றானதும் ஆன சிலப்பதிகாரத்தில் - கண்ணகியின் கால்களை அலங்கரித்த சிலம்பின் கதை. அக்கதையின் ஊடே நமது பயணத்தைத் தொடங்குவோம்.

பாண்டியன் மனைவி - கோப்பெருந்தேவியின் கால் சிலம்புகளில் இருந்தவை முத்துக்கள். கோவலன் மனைவி - கண்ணகியின் கால் சிலம்புகளில் இருந்தவை மாணிக்கப் பரல்கள். இந்த வேற்றுமையைந் தவிர இருவரின் சிலம்புகளின் அமைப்பில் வேறு மாறுபாடுகள் ஏதும் இல்லை என்பதே சிலப்பதிகாரத்தின் கூற்று. அப்படி வெளிப்புற மாறுபாடுகள் இருந்திருக்குமே யானால் பாண்டியமன்னன் ஏமாந்திருக்க மாட்டான் - பொற்கொல்லன் தன் சொற்கேட்டிருக்க மாட்டான்.

''தீவினைச் சிலப்பு காரணமாக ஆய்தொழ அரிவை கணவற் குற்றது['— என்று கண்ணகியின் கால் சிலம்பையே, காட்சிக் காதையில் செங்குட்டுவனிடம் தண்டமிழ் ஆசான் சீத்தலைச்சாத்தான் கூறுவதில் கண்ணகியின் கால் சிலம்பை மட்டுமே குறிப்பிடுகிறார் என்பது தெளிவாகிறது. மாதவியை விட்டு நீங்கி வந்த கோவலனிடம் கண்ணகிதன் கால் சிலம்பைக் கழற்றிக் கொடுத்தது முதல் அவன் கொலையுண்டது வரை நம் கண் முன் காட்சி தருவது அச்சிலம்பே. அதனால்தான் அதனைத் தீவினைச் சிலம்பு என்கிறார். உண்மையில் கோப்பெருந்தேவியின் சிலம்புதான் தீவினைச் சிலம்பு என்று குறிக்கப்பட வேண்டும். ஏனெனில் அவளது சிலம்புதான் பொற்கொல்லனின் மனதில் ஆசையை - தீவினையைத் தூண்டிவிட்டது. அதனைக் கவர்ந்து கொள்ள வேண்டும் என்ற வெறியில் - தன்னைத் தப்புவிக்க உதவும் என்ற முறையில் - கோவலனின், இல்லையில்லை, கண்ணகியின் கால் சிலம்பைக்காட்டி விடுகிறான். கண்ணகியின் சிலம்பினைத் 'தீவினைச் சிலம்பு என்றால் தேவியின் சிலம்பினை நல்வினைச் சிலம்பு என்று சொல்லலாமா ?

சிலப்பதிகாரத்தில் பின்னால் சொல்லப்பட்ட கதையை முன் வைத்துப் பார்ப்போமே !

(தொடரும்)

வேண்டுகோள்

இலக்கியம் இலக்கணம் சமயம் தத்துவம் வரலாறு கல்வெட்டு கலை பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் வேண்டப் பெறும். கட்டுரைகள் 4-6 பக்க அளவில் அமைதல் நலம். நெடிதாயின் வகைப்படுத்துத் தருதல் வேண்டும். ஒரு பக்கத்தில் தட்டச்சு அல்லது தெளிவான கையெழுத்தில் அமைதல் வேண்டும். ஆசிரியர் குழு தேர்ந்தளிக்குங் கட்டுரைகளே வெளியிடப் பெறும். இன்றியமையாத அடிக்குறிப்புக்களே சேர்க்கப்படும். தேரப்பெறாத கட்டுரைகள் திருப்பி யனுப்பப் பெறா ஆதலின் கட்டுரைகளைப் படியெடுத்துக் கொண்டு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

தமிழ்ப் பொழில் ஆசிரியர் குழு

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

யாழ் நூல் — ஆசிரியர் விபுலானந்த அடிகள்	ரூ.	50 00
கட்டுரைப் பொழில் தமிழ்ச்சங்க மணிவிழா மலர்	ரூ.	30 00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ.	60 00
இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ்	ரூ.	6 00
கபிலர் — நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ.	4 00
நக்கீரர் — நாவலர் ந மு வேங்கடசாமி நாட்டார்	ரூ.	3 00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு - பா. வே. மாணிக்க நாயக்கர்	ரூ.	2 00
கவியரசு நினைவு மலர்	ரூ.	1 00
தமிழரசி குறவஞ்சி	ரூ.	0 75

பிற வெளியீடுகள்

கரந்தைக் கோவை [ச பாலசுந்தரம்]		
கலைக் கூத்தன் கவிதைகள்	ரூ.	4 50

விற்பனைக் கழிவு 20% உண்டு அஞ்சற் செலவு தனி

தலைவர்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சாவூர்-613 002.

Regd. No. TN/TB/24.

நூல் அஞ்சல்

பெறுநர்

திரு மிகு ....

....

....

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு		வெளிநாடு	
தனியிதழ்	ரூ.	2	50	3	00
ஆண்டுக் கட்டணம்	ரூ.	30	00	60	00
வாழ் நாள் கட்டணம்	ரூ.	250	00	600	00

வெளியிடுபவர் திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்–613 002
அச்சிடுபவர் திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1887/1, மேலராசவீதி,
தஞ்சாவூர் - 613 009.